பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 06 வியாழக்கிழமை 20.05.2021 கதிர் 196

### இனி இது ரகசியம் அல்ல!

விகாரமடைந்து திரிவடைந்த –வீரியமான –கொரோனா வைரஸ் இந்தியாவில் பரவுவதை அடுத்து இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பயணிகள்விமானங்கள்வருவதற்குத் தடை விதித்தது இலங்கை அரசு.

அந்தத் தடை இருக்கத்தக்கதாக, இலங்கை பக்கம்02 »

## நாடாளுமன்றத்தில் விக்கி வினா

# ‘ஒரு நாடு – ஒரு சட்டம்’; அது சீனாவின் சட்டமா?

### வீணாகத் தமிழர்களுடன் பகைத்தமையால் இன்று உலகெங்கும் கடன் வாங்கும் நிலை என்கிறார்



கொழும்பு,மே20

“அண்மையில் ஒரு நாடு ஒரு சட்டம் எனப்பட்டது. அதற்கென்ன நடந்து? முழு நாட்டின் சட்டம் சீனச் சட்டம் என்றுதான் அவ்வாறு கூறியிருக்கின்றார்களா?

”வீணாகத் தமிழர்களுடன் பகைத்து இன்று உலகமெல்லாம் கடன் வாங்கும் வங்குறோத்து நிலையை அடைத்துள்ளீர்கள்.”

–யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் காட்டமாகக் கேள்வி எழுப்பிச் சுட்டிக்காட்டினார். ☞2

## வடக்கில் 137 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்மாவட்டத்தில் 69 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 137பேருக்குக்கொரோனா வைரஸ்தொற்றுள்ளமை நேற்று கண்டறியப் பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர்ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்பல்கலைக் கழக ☞2

## விமானங்கள் இலங்கை வரத் தடை

நாளை வெள்ளிக் கிழமை நள்ளிரவு முதல் 31ஆம் திகதி நள்ளிரவு வரை அனைத்து நாடுகளிலிருந்தும் இலங்கை வரும் பயணிகள் விமானங்களுக்குத் தற்காலிக தடை விதிக்கப்படவுள்ளது எனச் சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித் துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ளநெருக்கடி நிலைமையைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், குறித்த காலப்பகுதியில் ☞2

## கொரோனாத் தொற்றால் ஐந்தாவது கர்ப்பிணி பலி

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாகமேலும்ஒருகர்ப்பிணிப் பெண் உயிரிழந்துள்ளார் என்று குடும்பநல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில்நேற்று நண்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதேஅவர்மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்த 5 ஆவது கர்ப்பிணிப் பெண் இவர் ஆவார்.

# இலங்கையில் நேற்று மட்டும் 36 பேர் மரணம்

### நாளொன்றில் அதிக கொரோனா காவு

இலங்கையில் கொரோனா சாவுகளின் எண்ணிக்கை நேற்று திடீரென உயர்வடைந்துள்ளது. நேற்று மட்டும் 36 கொரோனா உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இதுவே இலங்கையில் நாளொன்றில் பதிவான ஆகக்கூடிய கொரோனா காவு எண்ணிக்கையாகும். இதன்படி நாட்டில் பதிவான மொத்த கொரோனா சாவுகளின் எண்ணிக்கை 1051ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

## ஒரே நாளில் 3,623பேருக்கு ’கொரோனா’

### பேரச்சத்தில் இலங்கை மக்கள்; பி.சி.ஆர். பரிசோதனை தீவிரம்



இலங்கையில் நேற்று மாத்திரம் 3 ஆயிரத்து 623 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நாளொன்றில் அதிகளவான தொற்றாளர்கள் பதிவான முதல் சந்தர்ப்பம் இதுவாகும். ☞11

## தொற்றாளர்களின் அசுர வேகத்தால் அடுத்த வாரங்கள் தீர்மானமிக்கவை

### – மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

நாட்டில் தினந்தோறும் அதிக கொரோனாவைரஸ்தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதால், எதிர்வரும் இரண்டுவாரங்கள் மிகவும் தீர்மானமிக்கவையாக இருக்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்னும் ஒன்று அல்லது இரண்டு நாள்களுக்குள்நிலைமைகட்டுக்குள் வந்துவிடுமென்று கூறிக்கொண்டு இருந்துவிட முடியாது என்றும் ☞2

## குடிவரவு– குடியகல்வுத் திணைக்களம் மறு அறிவித்தல் வரை இழுத்து மூடல்!

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அதிகரித்து வரும் கொரோனா பரவல் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என குடிவரவு ☞11

## தமிழ், முஸ்லிம் மொத்த வியாபாரிகளுக்கு துறைமுக நகர சட்டத்தால் பெரும் பாதிப்பு

### அபாய சங்கு ஊதுகின்றார் சாணக்கியன்



கொழும்பு,மே20

தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் – குறிப்பாகப் புறக்கோட்டையை மையமாகக் கொண்டு தொழில் செய்யும் தமிழ்,முஸ்லிம் மொத்த வியாபாரிகள் – இந்தத் துறைமுக நகர சட்டத்தினால் பெரும் பாதிப்படைவர். பத்து வருடங்களில் அவர்களின் வியாபார நிலையங்கள் முழுமையாக இல்லாமல் போகும் அபாய நிலைமை ஏற்படும்.

– இப்படி எச்சரித்திருக்கின்றார் ☞2

## அதிகாரப் பகிர்வைச் சிதைக்கின்றது கொழும்புத் துறைமுக நகர சட்டமூலம்

### காட்டமாக விமர்சிக்கின்றார் சுமந்திரன்



கொழும்பு,மே20

கொழும்புத் துறைமுக நகர சட்டமூலத்தின் வாயிலாக அதிகாரப் பகிர்வு இல்லாமல் ஆக்கப்படுகின்றது என்று குற்றம் சுமத்தி இருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

அவரும் கூட்டமைப்பின் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அரசின் அனுமதியுடன் நேற்றுக்காலை விசேட விமானம் ஒன்று கொழும்பு வந்திருக்கிறது.

இந்தியாவில் சிக்குப்பட்டிருந்த ஒரு தொகை இலங்கையருடன், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் பணியாற்றும் 19 அதிகாரிகளும் வருகை தந்தனர் எனக் கூறப்படுகிறது. ஒரே சமயத்தில் 19 அதிகாரிகள் ஏன் வருகின்றார்கள் என்று கொழும்பு ஊடகங்கள் சில கேள்வி எழுப்பின.

இங்கு கொழும்பில் ஏற்கனவே தமது சேவைக் காலத்தை முடித்து நாடு திரும்பியவர்களின் இடத்துக்கே புதியவர்கள் வருகின்றனர் என்று பதிலளிக்கப்பட்டது.

ஒரே சமயத்தில் 19 பேர் மாறுகின்றார்களா என மூக்கில் விரலை வைக்கிறார் கொழும்பில் ஒரு மூத்த ஊடகவியலாளர்.

இப்படி ஒரே சமயத்தில் புதிதாக 19 பேர் பணிக்கு வருவதன் பின்னால் ஏதேனும் சூத்திரம் பொதிந்திருக்கும் என்கின்றார் அவர்.

மலிந்தால் சந்தைக்கு – சந்திக்கு – வரும். அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்றார் அவர்.

* * *

பொதுஜன பெரமுன தலைமைக்கு தற்போதைய அரசை, தேசிய அரசாக மாற்றிக்கொள்ளும் எண்ணம் உண்டு என்று சில வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். வாசகர்களுக்கு நினைவு இருக்கலாம்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகத் தலைவரும், அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவுக்குப் புறப்பட முன்னர், இது விடயத்தில் தீவிரமான பேச்சுக்களிலும், முனைப்பான முன்னாயத்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார் என்று அடித்துக் கூறுகின்றன கொழும்பு ஊடகத் தரப்புகள்.

சில முக்கிய கட்சிகளுடன் இது குறித்து பேசப்பட்டிருக்கின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்த வரை அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட பலர் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி ஊடாகவே நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸின் பெயரிலும் சின்னத்திலும் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குச் சென்றிருப்பவர் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் மட்டும்தான். ஏற்கனவே அரசமைப்பின் இருபதாவது திருத்த விடயத்தில் கட்சியின் முடிவுக்கு மாறாக – திருத்தத்துக்கு ஆதரவாக – அரசுக்கு சார்பாக – வாக்களித்தவர் அவர். அவரை அரசுக்குள் உள்ளீர்த்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அரசில் சேர்த்த மாதிரியாகிவிடும்.

ஹக்கீமையும், ரிஷாத் பதியுதீனையும் விட்டுவிட்டு அவர்களின் கட்சிகளையும் சேர்த்துத் தேசிய அரசு அமைப்பதுதானாம் உத்தேசம்.

இப்போதைய அரசமைப்புப்படி, ஓர் அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை முப்பது. இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை நாற்பது. அதற்குக் கூடுதலாக நியமிக்க முடியாது. ஆனால் தேசிய அரசு அமைத்தால் நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை நிறைவேற்றி, அதற்கேற்ப அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.

ஏதேனும் ஓரிரு புதிய கட்சிகளை சேர்த்து, தேசிய அரசு அமைக்கப்படுவதாக பிரதமர் அறிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பை ஜனாதிபதி ஏற்றால், தேசிய அரசு அமைக்கப்படலாம்.

இன்றைய சூழலில் தேசிய அரசு என்ற திட்டத்துக்கு கோட்டா ஆட்சிப்பீடம் போனால் அதற்கு இரண்டு பயன்கள் உடனடியாகக் கிடைக்கும்.

அரசுக்கு உள்ளும் வெளியிலும் உரிய பதவிகள், பவிசுகள் வழங்கப்படாமல் இருக்கும் அதிருப்தியாளர்களுக்கு அமைச்சுப் பதவிகளைத் தாராளமாக வழங்கி எல்லோரையும் சமாளிக்கலாம்.

அரசுக்கு வெளியில் நிக்கும் மேலும் சிலரையும் இதன் மூலம் வளைத்துப் போட்டு அரசுக்குள் கொண்டு வந்து விடலாம் என்பதால் அரசின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உறுதியாக இருக்கும். அதனால் புதிய அரசமைப்பு உருவாக்கும் அரசின் திட்டத்தையும் தங்கு தடையின்றி முன்னெடுக்கலாம்.

இந்த இரண்டுக்குமாக தேசிய அரசை அமைக்கும் காய் நகர்தலை முன்னெடுக்கும் பசில் ராஜபக்ஷ, அதற்குப் பிரதியுபகாரமாக என்ன எதிர்பார்க்கிறார் என்பதுதான் அரசியல் வட்டாரங்களில் இப்போது அதிகம் பேசப்படும் கேள்வி.

நிதி அமைச்சர் பதவி என்கின்றனர் சிலர். இல்லை, பிரதமர் பதவி என்கின்றனர் வேறு சிலர். எதுவென்றாலும் அது மஹிந்த ராஜபக்ஷவின் அடிமடியில் கைவைக்கும் வேலை. தாம் வைத்திருக்கும் இந்தப் பதவிகளில் ஒன்றையோ அல்லது இரண்டையுமோ தம்பி பஸிலுக்காக அவர் விட்டுக் கொடுப்பாரா என்பது கேள்வியே .

பஸில் அமெரிக்காவில் இருந்து மீண்டதும், தேசிய அரசு அமைக்கும் அடுத்தகட்ட காய் நகர்த்தல் நடக்கலாம் என்கின்றன கொழும்பின் ஊடக வட்டாரங்கள்.

இது தொடர்பில் இன்னொரு கொசுறுத் தகவல். தேசிய அரசில் இணைவதற்கு ஐக்கிய தேசிய கட்சியும் தயாராம். அக்கட்சியின் தேசியப் பட்டியல் எம். பி நியமிக்கப்பட்டதும் (அது சில சமயங்களில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவாகக் கூட இருக்கலாம்), அவர் பதவியேற்ற கையோடு தேசிய அரசில் இணைவாராம். ஐ.தே. கட்சியின் ஒரே எம். பிக்கும் முக்கிய அமைச்சர் பதவியை வழங்க ராஜபக்ஷக்கள் தயாராக இருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

நாடு கொரோனாவின் பிடியில் சுருண்டு கிடந்தாலும், அரசியல் மட்டும் மும்முரமாக சூடு பிடிக்கும் என்றே தோன்றுகிறது.

ஆனால், என்ன, மாகாணசபை தேர்தல்கள்தான் இப்போதைக்கு இல்லை. மாகாண முதல்வர் கனவில் – நப்பாசையில் – கொட்டாவி வீட்டுக் கொண்டு, விட்டத்தைப் பார்த்துக்கொண்டிருப்போர் தான் பாவம். மூப்பில் செயல் இழக்க முன்னர், முதல்வர் கதிரையில் அமர்ந்து விடலாம் என்று பார்த்தால், ராஜபக்ஷக்கள் மாகாணத் தேர்தல்கள் பற்றி கவலைப்படுகிறார்கள் இல்லையே என்று மனதுக்குள் பொருமிக் கொண்டு அவர்கள் இருக்கவேண்டியது தான்.

- மின்னல் -

## வடக்கில்...

மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 840 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 137 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 69 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 23 பேரும், வவுனியா மாவட்டத்தில் 3 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 பேரும் என 137 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஆடைத்தொழிற்சாலை பணியாளர்கள் 38 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் 16 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 9 பேர் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள்.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் இருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 5 பேருக்கும், கோப்பாய் வைத்தியசாலையில் இருவருக்கும், தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நான்கு பேருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 28 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது –என்றார்.

## ஒரு நாடு...

கொழும்புத் துறைமுகப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின் மீது நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த உரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

இந்தச் சட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்றி விடலாம் என்று எண்ணங்கொண்டிருந்த அரசாங்கத்தின் கடிவாளத்தை உச்ச நீதிமன்றம் கெட்டியாகப் பிடித்து வைத்துள்ளது. பல சரத்துக்கள் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாக உள்ளன என்று கூறியுள்ளது. இலங்கைக்குள் ஒரு சீன நகரத்தை உருவாக்க முனைகின்றது அரசாங்கம் என்பதே அதற்கெதிரான குற்றம். பொறுப்பற்ற கடன் வாங்கலும் தமது மனித உரிமை மீறல்களினால் உலக அரங்கில் இலங்கை தனிமைப்பட்டிருப்பதாலும் சீனாவின் காலடியில் போய் விழவேண்டி வந்துள்ளது. இந்தச் சட்ட வரைவை வர்த்தமானியில் பிரசுரித்த அதே நாளிலேயே மேலும் ஒரு சீனக் கடனை இந்த அரசாங்கம் பெற்றுள்ளது என்பதை நாம் மறக்கக் கூடாது.

நாங்கள் தொடர்ந்து அரசாங்கங்களிடம் கேட்டு வருவது ஒரே நாட்டினுள் கூட்டு சமஷ்டி முறையில் அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டும் என்பதே. அதைச் செய்ய விரும்பாமல் எங்கோ இருக்கும் சீனாவின் கடனாளியாக மாறியுள்ளது அரசாங்கம். அவர்கள் கேட்டபதை எல்லாம் கொடுக்கின்றார்கள். நாங்கள் கேட்பதெல்லாவற்றையும் மறுத்து விடுகின்றார்கள்.

அண்மையில் ஒரு நாடு ஒரு சட்டம் எனப்பட்டது. அதற்கென்ன நடந்து? முழு நாட்டின் சட்டம் சீனச் சட்டம் என்றுதான் அவ்வாறு கூறியிருக்கின்றார்களா?

வீணாகத் தமிழர்களுடன் பகைத்து இன்று உலகமெல்லாம் கடன் வாங்கும் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளீர்கள்.

மணலாற்றில் சிங்களப் பெயர் முதன்மை பெறுகின்றது. துறைமுக நகரத்தில் சீன மொழி முதலிடம் பெற்றுள்ளது. சில இடங்களில் சீன மொழி மட்டுமே காணக் கூடியதாக உள்ளது.

இந்த நாடு எங்களுக்கும் உரியது, எமது இனம் தனித்துவமான ஓர் இனம் என்பதை வலியுறுத்திக் கொண்டே எமது நாட்டை விற்கவோ ஈடு வைக்கவோ அனுமதி அளிக்க முடியாது.

இந்த வரைவு துறைமுக நகர ஆணைக்குழுவிற்கு நாட்டிற்கு இருக்கும் சட்டவாக்க உரிமைகளையும் நீதித் துறையின் ஏகோபித்த உரிமைகளையும் தரை வார்த்துக் கொடுத்துள்ளது. மாற்றங்கள் செய்யாவிட்டால் எமது நாட்டினுள் இன்னொரு நாடு பரிணமித்து விடும்.

ஆகவே உச்ச நீதிமன்றம் கூறிய திருத்தங்களை உள்ளடக்கி ஒரு புதிய வரைவை எமக்கு நல்குங்கள். அதைப் படிக்க போதிய அவகாசம் தாருங்கள். அவசரப்பட்டு இந்தச் சட்ட மூலத்தின் மீது நாளை (இன்று) வாக்கெடுப்பை நடத்தாதீர்கள்.– என்றார்.

## விமானங்கள்...

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கான விமானப் போக்குவரத்துக்கள் முன்னெடுக்கப்படும் எனவும், சரக்கு விமானங்களின் சேவைகளும் தொடரும் எனவும் சிவில் விமான சேவைகள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வருவதும் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் சிவில் விமான சேவைகள் அதிகார சபை அறிவித்துள்ளது.

## தொற்றாளர்களின்...

தானாகவே பேரழிவுக்குள் தள்ளப்படும் என்றும் அந்த சங்கத்தின் உதவி செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடுத்த கொத்தணி எங்கிருந்து தோன்றும் என்று தெரியாது என்றும், இதனால் அடுத்த இரண்டு வாரங்கள் மிகவும் தீர்மானமிக்கதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சுகாதார அதிகாரிகளால் மட்டுமே நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது என்றும், இவ்வாறானதொரு இக்கட்டான நிலையில் பொதுமக்கள் தங்கள் சுயக் கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்...

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் இணைந்து நேற்றுத் தான் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார் அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

இந்த வர்த்தகர்கள் சீனாவிலிருந்துதான் இன்று பொருள்களை இறக்குமதி செய்து ஒரு பத்து அல்லது பதினைந்து வீதத்தை மேலதிகமாக லாபமாக வைத்து வியாபாரம் மேற்கொண்டு உழைக்கின்றார்கள்.

சீனாவில் இருக்கும் நிறுவனங்கள் இங்கு நேரடியாக வந்து தமது வர்த்தக நிலையங்களை அமைத்து, தங்கள் பொருள்களைத் தாங்களே நேரடியாகக் கொண்டு வந்து வர்த்தகம் செய்தால் நமது தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களின் வியாபாரம் ஒரேயடியாக அடிபட்டுப் போகும். தொழில் செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

பெந்தோட்டை, பேருவளைப் பகுதி இரத்தினக்கல் வியாபாரிகளுக்கும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உண்டு.

சீனர்களே நேரடியாக இங்கு வந்து இரத்தினக்கல் வியாபாரத்தை கையாளும் வாய்ப்பு இந்தச் சட்டத்தினால் ஏற்படும். இதனால் நமது வர்த்தகர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வர்.– என்றார் அவர்.

## அதிகாரப்...

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சாணக்கியனும் நேற்றுக் கொழும்பில் கூட்டாக பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். அங்கேயே இந்த விடயத்தை அவர் முன்வைத்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

செயற்கையாக ஒரு நிலப்பரப்பை உருவாக்கி, அதனை இலங்கைச் சட்டங்களுக்கு அப்பாற்பட்டதாக இந்தச் சட்டமூலம் மாற்றுகின்றது. அதனால் நாம் அதனை எதிர்க்கின்றோம்.

உயர் நீதிமன்றம் இச்சட்டமூலத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று கூறி இருக்கின்றது. இந்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு ஒத்ததா, இல்லையா என்பதை மட்டும்தான் உயர் நீதிமன்றம் பார்க்குமே தவிர, இது நாட்டுக்கு நல்லதா, கெட்டதா என்று அது நோக்காது.

இந்தச் சட்டமூலத்தின் வாயிலாக அதிகாரப் பரவலாக்கல் இல்லாமல் ஆக்கப்படுகின்றது. ஏனெனில் நிலம் – காணி – அதிகாரங்கள் மாகாணத்துக்குப் பகிரப்பட்டவை. இந்த இடம் அரச காணி என்று சொல்லப்படுகின்றது. அதிகாரப் பகிர்வின்படி இது சம்பந்தமாக மாகாணசபைகளின் கருத்துக்களைக் கேட்காமல் இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க முடியாது. ஆனால் அது சமர்ப்பிக்கப்பட்டு, இப்போது இரண்டாம் வாசிப்பும் நடைபெறுகின்றது.

இது இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் ஒரு விடயம். நாட்டினுடைய– நாடாளுமன்றத்தினுடைய –கட்டுப்பாட்டையும், சட்டங்களினுடைய ஆட்சியையும் மீறிச் செயற்பட வழி செய்யும் ஒரு முறையிலே இந்தச் சட்டமூலம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டிலே வாழுகின்ற – சீராக, நேராக ,சரியாகச் சிந்திக்கின்ற அனைவரும் இதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.– என்றார் அவர்.

# நாட்டின் வளங்களை விற்க அரசு முயற்சி



## ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு

கொரோனாத் தொற்றினால் மரணிப்பவர்களை கவனத்திற்கொள்ளாமல் நாட்டின் வளங்களை விற்பனை செய்ய இந்த அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு வளங்களை விற்று தங்களின் பைகளை நிரப்பிக்கொள்ளவே இந்த அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அத்தோடு கடந்த அரசாங்கத்தின் காலத்தில் 99 வருடங்களுக்கு குத்தகை மட்டுமே கொடுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரம் தற்போது சீனாவிற்கு முழுமையாக வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டினார்.

மேலும் கொழும்பு துறைமுக நகருக்கு செல்ல சீனத் தூதரகம் அழைப்பு விடுத்துள்ளமையை சுட்டிக்காட்டிய அவர், இந்த நடவடிக்கை சுங்கத்துக்கு சென்று வரும்போது வரிசெலுத்துவதை போன்ற செயற்பாடு என்றும் குற்றம் சாட்டினார்.

## துரைரட்ணத்துக்கு ஸ்ரீகாந்தா அஞ்சலி!

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் அவர்கள், நெருக்கடிகள் நிறைந்திருந்த போர்ச் சூழ்நிலையில் பொறுப்புணர்வுடன் பணியாற்றிய ஒரு தமிழ்த் தேசியவாதி ஆவார்.

– இவ்வாறு அஞ்சலி தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தார். அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எளிமையான தோற்றமும், அடக்கமான சுபாவமும் கொண்ட அவர், தனது பண்பியல்புகளால் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட பலராலும் நன்கு மதிக்கப்பட்டவர். கேந்திர முக்கியத்துவம் மிக்க திருகோணமலை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் நலன்களில் அவர் தீவிர அக்கறை கொண்டிருந்தார். அவரின் மறைவினால் துயருறும் அனைவரோடும் நாமும் இணைந்து நிற்கின்றோம். – என்றுள்ளது.

## புற்றுநோய் தேங்காய் எண்ணெய் தற்போது நாட்டில் இல்லையாம்

### வர்த்தக அமைச்சர் கூறுகின்றார்



புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது என்று கடந்த காலப்பகுதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் அனைத்தும் மீள ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் நாடாளுமன்றத்தில் கேட்ட வாய் மூலமான கேள்விக்கு பதில் அளிக்கும் போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

புற்றுநோயை உண்டாக்கும், இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் எதுவும் சந்தைக்கு விநியோகிக்கப்படவில்லை என்பதை சுங்கப் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## கர்ப்பிணித் தாய்மாருக்கு சினோபோர்ம் சிறந்ததாம்

இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சினோபோர்ம் தடுப்பூசியை வழங்குவது சிறந்தது என மகப்பேற்று மற்றும் பெண்ணோயியல் மருத்துவர்கள் நிறுவனத்தால் சுகாதார அமைச்சுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, ஏனையவர்களுக்குப் போன்று தடுப்பூசி மையங்களில் தடுப்பூசி போடக்கூடாது என்றும், இதற்காக விசேட வழிமுறை ஒன்று முன்மொழியப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மகப்பேற்று பெண்ணோயியல் மருத்துவர்கள் நிறுவனத்தின் செயலாளர் வைத்தியர் சாமிந்த மாதொட்ட தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்று பெண்ணோயியல் வைத்தியர் மயுரமாண தெவலகேயும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இங்கு அவர் கருத்து தெரிவிக்கையில் –

கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு நியூமோனியா நிலைக்கு தள்ளப்படுகின்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இலங்கையில் ஒரு சிகிச்சை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.


# University of Jaffna, Sri Lanka

Faculty of Allied Health Sciences

University Admissions – Academic Year 2020/2021

**Bachelor of Science (Honours) in Physical Education**

**MEDIUM: ENGLISH**

Applications are hereby invited to follow the above Degree Programmefrom suitable candidates whopossess the minimum University admission requirements for the academic year 2020/2021.

**Eligibility for Admissions**

Those who wish to follow the Bachelor of Science (Honours) in Physical Education should have obtained atleast three "S" grades in any three subjects at G.C.E (A/L) exam 2020 in a stream and minimum marks of 30 for the Common General Paper within three attempts.

**Method of Evaluation**

Applications will be evaluated as proposed below:

| | |
|---|---|
| **Theory test** | To evaluate candidates' knowledge related to Physical Education |
| **Practical Test** | To evaluate candidates' physical fitness and playing ability |
| **Previous Sports Achievements** | Marks will be allocated for previous sports achievements. Candidates should upload scanned copies of certificates of their highest sports achievements along with their applications (details are available in the application form). |

Candidates who apply for Bachelor of Science (Honours) in Physical Educationshould sit for an Aptitude Test which would be conducted jointly by the University of Jaffna and Sabaragamuwa University of Sri Lanka.The Aptitude Test will be conducted in English.Due to the COVID–19 pandemic situation selection test will be conducted via online.

**Submission of Application**

Applicants are hereby requested to apply online through the University website **www.jfn.ac.lk**

**Deadline for application:** 10.06.2021

Eligible candidates will receive the admission card for the aptitude test only via email. The date of the aptitude test will also be notified via email.

**Payment Method**

Application fee of Rs.1000/= should be made in any branch of the Peoples' Bank in favor of the University of Jaffna Account No. 440002410001667.

**Registrar,**
**The University of Jaffna.**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொது நிலைப்பாட்டுக்குத் தயாரா?

**தேர்தல் முறைமைகளை மாற்றியமைப்பது குறித்து ஆராய்கிறது கோட்டாபயவின் புதிய அரசு.**

**அதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது. அத்தெரிவுக்குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றுள்ளது.**

**தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையை இனி மாகாண சபைத் தேர்தல்களிலும் – இயலுமானால் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் – சேர்த்து மாற்றுவதுதான் அரசின் உத்தேசம்.**

**எழுபது வீதம் தொகுதி வாரியாகவும், முப்பது வீதம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலும் தெரிவுகளை முன்னெடுக்க அரசு திட்டமிடுவதாகத் தெரிகின்றது.**

**அந்த எழுபது வீதத் தொகுதிவாரியான தேர்தல்களிலும் தொகுதிக்கு மூன்று வேட்பாளர்களை கட்சிகள் நிறுத்தவும், அத்தொகுதியில் வெற்றி பெறும் கட்சியில் அதிக விருப்பு வாக்குகளை பெறுபவரை வெற்றியாளராக அறிவிக்கவும் வழி செய்யும் ஒரு தேர்தல் முறைமையை ஆளும் தரப்பு நாடுவதாகக் கூறப்படுகின்றது.**

**இதன் மூலம் இரண்டு தரப்புகள் பிரதானமாகப் பாதிக்கப்படலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**ஒன்று – பெரும்பான்மை மக்கள் மத்தியில் சிதறி வாழும் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் இந்த முறைமையினால் அடிபட்டுப் போகும். எந்தத் தொகுதியிலும் அவர்களுக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டாது.**

**இரண்டு – பெரிய கட்சிகளுடன் கூட்டுச் சேரும் சிறிய கட்சிகள் தொகுதிகளில் பெரிய கட்சிகளின் வேட்பாளரிடம் வெற்றி பெறும் வாய்ப்பை இழப்பர். அதாவது, பெரிய கட்சிகளுடன் கூட்டுச் சேருவதன் மூலம், அவற்றின் வாக்குகளைச் சுருட்டி இதுவரை காலமும் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுவந்த சிறிய கட்சிகளுக்கு அந்த வாய்ப்பு பறிபோகும்.**

**இதனால் இந்த இரண்டு தரப்பாருமே உத்தேச யோசனைத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கின்றனர்.**

**முதலாவது வகையில் – இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் எல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.**

**இரண்டாவது வகையில் – விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின், பிவித்ரு ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடது முன்னணி போன்ற கட்சிகள் எதிர்க்கின்றன.**

**விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் பெரிய கட்சிகளின் முதுகில் சிறிய கட்சிகள் குதிரை விடும் வாய்ப்பு அதிகம் இருந்தது. அதை மாற்றி சிறிய கட்சிகளை மிதித்து, பெரிய கட்சிகள் அவற்றின் மீது அதிகாரத்துக்கு ஏறும் முறைமையை நாசூக்காக – நுட்பமாக – சத்தம் சந்தடியின்றி – திணிக்கும் ஓர் எத்தனம் இது.**

**ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளைப் பொறுத்தவரை அவற்றுக்கு நேரடியாக இதில் பாதிப்பு இல்லை எனலாம். அவர்களின் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்றவற்றின் – வாக்காளர்கள் தொகுதி ரீதியாக வரையறுக்கக் கூடிய பிரதேசங்களில் செறிந்து வாழும் நிலைமை நீடிப்பதால் அவற்றின் பிரதிநிதித்துவத்தில் பெரும் பாதிப்பை உத்தேச திட்டம் ஏற்படுத்தாது.**

**ஆனாலும், உத்தேச தேர்தல் முறைமை மாற்றத்தை கூட்டமைப்பும் எதிர்க்கின்றது. அந்த எதிர்ப்பு கொள்கை ரீதியானது.**

**வடக்கு, கிழக்குக்கு வெளியில் – தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு வெளியில் – வசிக்கும் தமிழர்கள், முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை இந்த உத்தேச முறைமை பாதிக்கும் என்பதால் இந்த எதிர்ப்பு.**

**தமிழ்க் கூட்டமைப்பின் இந்த எதிர்ப்பு பற்றிய விடயம் அண்மையில் இ.தொ.காவின் தலைமைப் பிரமுகரும் இராஜாங்க அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானுடனும், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் தனித்தனியாக நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கூட்டமைப்பின் பேச்சாளரும் பிரமுகருமான சுமந்திரன் எம்.பியினால் விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றது.**

***“உத்தேச தேர்தல் முறைமை வடக்கு, கிழக்கில் வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கூட்டமைப்பு போன்ற கட்சிகளுக்கு நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. நுட்பமாக நோக்கினால் அவற்றுக்கு அது சற்றுச் சாதகமானதும் கூட. ஆனால் ஒட்டுமொத்தத்தில் சிறுபான்மையினருக்கு இந்தத் தேர்தல் முறையால் பாதிப்பு என்பதால் அந்த முறைமையை கொள்கையின் அடிப்படையில் நாம் எதிர்க்கின்றோம். அதே போக்கை சிறுபான்மையினரைப் பாதிக்கும் அனைத்து விடயங்களிலும் – சிறுபான்மையினரின் ஏனைய கட்சிகளும் – கொள்கை ரீதியாக எடுக்க வேண்டும் என்று நாங்கள் அதே உரிமையுடன் எதிர்பார்க்கிறோம். சிறுபான்மையினர் பெரிதும் பாதிக்கப்படுவர் என்று தெரிந்து கொண்டே அரசமைப்பின் 18 மற்றும் 20 ஆவது திருத்தங்களை இ.தொ.கா. ஆதரித்தது. முஸ்லிம் காங்கிரஸ் 18 ஆவது திருத்தத்தை ஆதரித்தது. சிறுபான்மையினரைப் பாதிக்கும் விடயங்களில் அரசியல் அணி, கட்சி சாராமல் நியாயமாக முன்னெடுக்கும் கொள்கை நிலைப்பாட்டில் சிறுபான்மையினரின் கட்சிகள் யாவும் நிற்குமாயின் நாங்களுமம. அந்நிலைப்பாட்டில் உறுதியாக நிற்போம்.”*** **– என்று அவர் தெரிவித்தவை சரியான நிலைப்பாடுதான்.**

**சிறுபான்மையினரின் கட்சிகளின் பதில் என்ன?**

## மன்னார் இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு அரச அதிபர் தலைமையிலான குழு விஜயம்



மன்னார் தாராபுரம் துருக்கிச் சிட்டியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா இடை நிலை சிகிச்சை நிலையத்துக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை விசேட கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன், மன்னார் பிரதேச செயலாளர் எஸ்.பிரதீப், மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞான பிரிவுக்கான வைத்திய அதிகாரி வைத்தியர் கதிர்காமநாதன், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி கே. திலிபன் உட்பட வைத்தியர்களும் சென்றிருந்தனர்.

இதன்போது குறித்த கொரோனா இடை நிலை சிகிச்சை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்துச் செயற்பாடுகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

தற்போது வட மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையால் கூடுதலான பெண்கள் தொற்றுக்கு உள்ளாவதைக் கருத்தில் கொண்டு பெண்களுக்கான சிகிச்சை நிலையமாக குறித்த கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையம் இயங்க உள்ளது.

ஒரே நேரத்தில் நூறு நபர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று (புதன்கிழமை) முதல் மன்னார் தாராபுரம் துருக்கிச் சிட்டியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா இடை நிலை சிகிச்சை நிலையத்தில் பெண் தொற்றாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நடவடிக்கைகள் ஆரம்பமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொஸ்கொட தாரக, ஊரு ஜுவாவின் மரணங்கள்; முழுமையான விசாரணை அறிக்கையைத் தரவும்

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

பாதாள உலகத் தலைவர்களான கொஸ்கொட தாரக எனப்படும் தர்மதாஸ தாரக்க பெரேரா மற்றும் ஊரு ஜ்வா எனப்படும் நாவுலகே தினித் மெலான் ஆகியோர் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தமை தொடர்பான விசாரணையின் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபரிடம் அறிவித்தல் விடுத்துள்ளது.

தமக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாகவே, ஆணைக்குழு பொலிஸ்மா அதிபரிடம் முழு விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

பொலிஸ் பாதுகாப்பில் உள்ள சந்தேக நபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பு என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் உத்தரவுகள் மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளிலும் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறெனில், கடந்த சில நாள்களில் நிகழ்ந்துள்ள மரணங்கள் சட்டவாட்சி தொடர்பில் நாட்டினுள் பாரிய சிக்கலை தோற்றுவித்துள்ளன என ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## வீடமைப்பு அமைச்சு அதிகாரிகளுக்கு பிரதமர் மஹிந்த அறிவிப்பு விடுத்தார்



குறைந்த வருமானம் பெறுவோரின் பகுதியளவில் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நிதியுதவிகளை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற குழு அறை 02 இல் இடம்பெற்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஆலோசனை குழுவில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நிலையான கட்டளை 112 இன் விதிகளின் படி குழுவிற்கு அறிவிக்கப்படும் விடயங்கள் தொடர்பாக விவாதிக்கும் போதே பிரதமர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்.

இதன்போது, காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன சட்டமூலத்தின் திருத்தச் சட்ட மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேராவால் ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது.

காலி மற்றும் திவுலபிட்டிய பிரதேசங்களின் தோட்டங்களை அண்மித்து காணப்படும் குடிசை வீடுகள் தொடர்பில் வெளிப்படுத்தி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய கருத்துக்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ , அப்பகுதிகளுக்கு வீட்டுத் திட்டங்களை திட்டமிடுமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

## ஆடைத் தொழிற்சாலைகளை வவுனியாவில் மூட கோரிக்கை

வவுனியா, மே 20

வவுனியாவில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகளின் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் மூன்று பேர் அண்மையில் கொரோனா நோயாளர்களாக இனங்கானப்பட்டுள்ளனர்.

இதனால் பல குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இது பரவலடையும் சந்தர்ப்பத்தில் பாரிய கொத்தணியாக உருவாகுவதற்கு அதிகமான வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தனியார் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

எனவே தொற்று பரவலடையும்போது அவர்களது குடும்பங்களும் பாதிக்கப்படும் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, மாவட்ட நிர்வாகமும் சுகாதார பிரிவினரும் இந்தவிடயம் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தி ஆடைத்தொழிற்சாலைகளின் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.நா. சபை கட்டமைப்பு




பஸ்றி ஸீ. ஹனியா
சட்டத்துறை மாணவி
யாழ். பல்கலைக்கழகம்

ஐக்கிய நாடுகள் சபையானது தன்னுள் பிரதான ஆறு உறுப்புக்களைக் கொண்டுள்ளது. பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார – சமூக நலச் சபை, நம்பிக்கைப் பொறுப்புச் சபை, சர்வதேச நீதிமன்றம், செயலகம் என்பனவே அவையாகும். அந்த உறுப்புகளுக்கெனப் பல பணிகளும் அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு உறுப்புகளையும் ஆழமாக நோக்கினால்,

**பொதுச் சபை (General Assembly)**

பொதுச் சபை என்பது அனைத்து அங்கத்துவ நாடுகளுக்குமான ஒரு பொது அரங்கம் ஆகும். சகல அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தச் சபையில் இடம்பெறுவர். இங்கு இருக்கின்ற ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு வாக்கு உண்டு. சமாதானமும் பாதுகாப்பும், புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல், வரவு – செலவுத் திட்டங்களைப் பார்த்தல் போன்ற முக்கிய விடயங்களில் மூன்றிலிரண்டு விசேட பெரும்பான்மை வாக்குகளின் மூலமே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

ஐ.நா. சபை சாசனத்தின்படி பணிகளும் அதிகாரங்களும் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

**அவையாவன -**

* ஐக்கிய நாடுகளின் வரவு – செலவுத் திட்டத்தைப் பரிசோதித்து அங்கீகாரம் அளித்தல். ஒவ்வொரு நாடும் எவ்வளவு நிதிப் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.
* நாடுகளுக்கிடையிலான நட்புகளைப் பாதிக்கக் கூடிய ஏதேனும் பிரச்சினைகள் தோன்றும்போது அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் அமைதி வாயிலான சிபாரிசுகளை முன்வைத்தல்.
* சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுவதற்காக ஆயுதப்பரிகரணம் மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான கோட்பாடுகளை ஆராய்ந்து சிபாரிசு செய்தல்.
* பாதுகாப்புச் சபையில் ஆராயப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது சர்வதேச சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் விடயங்கள் பற்றி பரிசீலனை செய்து சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.
* சாசனத்தின் வரம்புக்குட்பட்ட ஏதேனும் பிரச்சினைகள் இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து சிபாரிசு செய்தல்.
* சர்வதேச அரசியல் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் சர்வதேச சட்டத்தை விருத்தி செய்து கோவைப் படுத்துவதற்கும் சகலருக்கும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார, சமூக, கலாசார, கல்வி, சுகாதாரத் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் ஆய்வுகளை மேற்கொண்டு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.
* பாதுகாப்புச் சபையிடமிருந்தும் ஏனைய ஐ.நா. உறுப்பு நாடுகளிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற்றுப் பரிசீலனை செய்தல்.
* பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களையும் பொருளாதார – சமூக நலச் சபையின் உறுப்பினர்களையும் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கான தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களையும் தெரிவு செய்தல்.
* பாதுகாப்புச் சபையுடன் இணைந்து சர்வதேச நீதிமன்றத்துக்கு நீதிபதிகளைத் தெரிவு செய்தல்.
* பாதுகாப்புச் சபையின் சிபாரிசுகளுக்கு அமைய செயலாளர் நாயகத்தை நியமித்தல்.




ஐ.நா. பொதுச் சபையில் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய 5 நாடுகளும் வீட்டோ பவர் கொண்ட நிரந்தர அங்கத்துவ நாடுகளாகும். ஏனைய 10 அங்கத்துவ நாடுகளும் இரண்டு வருடகாலப் பதவிக்கெனப் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.



**பாதுகாப்புச் சபை (Security Council)**

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின்படி சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுகின்ற பிரதான பொறுப்பு பாதுகாப்புச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சபையில் சுமார் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றுள் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய 5 நாடுகளும் வீட்டோ பவர் கொண்ட நிரந்தர அங்கத்துவ நாடுகளாகும். ஏனைய 10 அங்கத்துவ நாடுகளும் இரண்டு வருடகாலப் பதவிக்கெனப் பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

ஒவ்வோர் அங்கத்துவ நாட்டுக்கும் ஒரு வாக்கு உண்டு. நடைமுறை விடயங்களில் குறைந்தபட்சம் ஒன்பது நாடுகளின் சாதகமான வாக்குகளுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். ஆனால், முக்கிய விடயங்களில் தீர்மானம் எடுப்பதற்கு 5 நிரந்தர அங்கத்துவ நாடுகள் அடங்கலாக ஒன்பது நாடுகளின் வாக்குகள் அவசியமாகும் .

இங்குதான் ஐந்து நிரந்தர அங்கத்துவம் கொண்ட நாடுகளின் வீட்டோ அதிகாரத்தை அவதானிக்க முடிகின்றது. வல்லரசுகளின் ஏகோபித்த நிலைப்பாடு இல்லாமல் எந்தவொரு முக்கியமான தீர்மானங்களையும் எடுக்க முடியாது.

நாடுகள் சமமாக மதிக்கப்படும், சம உரிமைகள் பேணப்பட வேண்டும் என்ற கூற்றுகளை ஐ.நா. தன்னகத்தே கொண்டிருந்த போதிலும் வீட்டோ அதிகாரம் வழங்கப்பட்ட நாடுகளைத் தலையில் மேலே வைத்துக்கொண்டுதான் இவ்வளவு விடயங்களையும் பேசிக் கொண்டிருக்கின்றது என்பது விமர்சனத்துக்குரியதே.

**பாதுகாப்புச் சபையின் அதிகாரங்களையும் பணிகளையும் எடுத்து நோக்கினால் -**

* செயலாளர் நாயகத்தின் நியமனத்தைப் பொதுச் சபைக்குச் சிபாரிசு செய்தல்.
* பொதுச் சபையுடன் இணைந்து சர்வதேச நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்.
* போர் நடக்கும் பிரதேசங்களில் ஐக்கிய நாடுகளின் நம்பிக்கைப் பொறுப்புக் கடமைகளை நிறைவேற்றுதல்.
* புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்ள சிபாரிசு செய்தல்.
* அவசியமான இடங்களில் இராணுவ நடவடிக்கைகளை ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக எடுத்தல்.
* ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு – நிறுத்துவதற்குப் பொருளாதாரத் தடை போன்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி அங்கத்துவ நாடுகளுக்குச் சிபாரிசு செய்தல்.
* ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் அமைப்பு முறையை ஏற்படுத்தித் திட்டங்களை வகுத்தல்.
* சர்வதேச நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினைகளை விசாரித்தல்.
* ஐ.நா. சபையின் நோக்கங்களுக்கமைய சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.



(தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

வே.வரதசுந்தரம்

உலக வாழ்வில் அமைதியிழந்து, அலமந்து நிற்பார்க்குச் சாந்தி தருவது சமயம். மனித நேயத்தை வளர்த்து, மக்களை நல்லாற்றுப்படுத்தி ஒருமைப்பாட்டினை நோக்கி வழிநடத்திச் செல்வது, செல்லவேண்டியது சமயம். மக்களிடையே சச்சரவுகளை உண்டாக்கும் கோட்பாடு அல்ல சமயம். சமயச் சச்சரவுகள் காரணமாக உலகில் நிகழ்ந்த கோரயுத்தங்களை, சமயப் பிணக்குகளால் சிந்தப் பெற்ற செங்குருதியைக் கண்டு உண்மைச்சமயி துணுக்குறுவான். சமயத் தலைவர்கள் தலைகுனிவர்.

ஆயினும் இன்று சமயங்களுக்கிடையே உருவாகும் புரிந்துணர்வு நம்பிக்கையைத் தருகிறது.

பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே நமது சான்றோர்கள் பாடிய சமயசமரச நெறியினைப் பாருங்கள்:

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்.'

'தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!'

'யான்பெறும் இன்பம் பெறுக இவ்வையகம்.'

சுந்தரமூர்த்தி நாயனார் பல சைவ நாயன்மார்களைத் துதித்த பின்னர், 'அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்' என்று போற்றுகின்றார். 'அப்பாலும்' என்ற சொற்றொடர் சிந்திக்க வேண்டிய பொருள் பொதிந்த சொற்றொடர். கால, தேச, சமய வேறுபாடுகளைக் கடந்த ஒருமைப்பாட்டினைக் குறிப்பது.

உலகளாவிய, தொன்மைவாய்ந்த சமயசமரச சிந்தனையைத் தன்வழிகாட்டலின்கீழ் பேரியக்கமாக, பாரியசக்தியாக, ஆற்றுப்பெருக்கென மக்களை ஒருகுடை நிழற்கீழ் அழைத்துச் செல்கின்ற பகவான் பாபா இறையவதாரம் என்று திருகோணமலையின் மைந்தன் தமிழ்கூறும் நல்லுலகு போற்றும் இதழியல் கலாமேதை எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் உறுதிபடத் தெரிவிக்கும் கூற்று கேட்டுத் தெளிவுபெறுகின்றோம். அன்னார் தனக்கே உரிய இனியதனிநடையில் விளக்கம் தருகின்றார், பாருங்கள் :–

'புட்டபர்த்தியிலுள்ள பிரசாந்தி நிலையத்தின் பிரார்த்தனை மண்டபம் முற்பகல் 11.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும், அதிகாலை 4.00 மணிக்கும் ஓர் குட்டி ஐ.நா.சபை போல் காட்சியளிக்கிறது.

இந்தியாவில் உள்ள சர்வமத, சர்வ இன, சர்வ மொழி மக்கள் மட்டும் அல்லாமல், அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், பர்மா, சீனா, மலேசியா, இலங்கை முதலிய பல்வேறு நாடுகளைச் சார்ந்த பக்தர்களும் அங்கு கூடுகின்றனர். தத்தம் மனதில் உள்ள விவகாரங்களை மௌனத் தியானத்தின் மூலமும், பஜனைப் பாக்கள் மூலமும், பிரார்த்தனைப் பூக்கள் மூலமும், சாயிநாதனின் பாதங்களில் சமர்ப்பித்து, நிரந்தரமான, நிறைவான சாந்தியைத் தேடிக் கொள்வதே அங்கு ஒன்றுகூடுவோரின் நோக்கமாகும்.





மனித உருப்பெற்றுப் பிறந்த ஒரு புனித பிறவியின் ஊடாக, ஆண்டவன் தனது திருவுள்ளத்தையும், வழிநடத்தலையும், கட்டளைகளையும்,நீதிநெறிகளையும், அற்புதங்களையும் பிரவகித்து, மனித குலத்தை நெறிப்படுத்திய விருத்தாந்தமும், இரட்சித்த வரலாறும் உலகந்தோன்றிய நாள்முதல், காலத்துக்குக்காலம் நடைபெற்று வந்தமைக்குச் சான்றுகள் பலவுள்ளன.

மனித உருப்பெற்று மனிதனாக நடமாடிய பரமாத்மாவுக்கு இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் எடுத்துக்காட்டாக அமைகின்றன. தேவனின் அம்சம் பெற்று அவருடைய திருச்சுதனாகப் பூவுலகில் மனிதவுருவில் தோன்றி, அற்புதங்கள் நிகழ்த்தி, சிலுவையில் மரித்த இயேசுபெருமான் மற்றொரு உதாரணமாவார். மனிதத் திருமேனி பெற்ற ஒரு திருவின் ஊடாக இறைவன் தனது திருவுள்ளத்தை வெளிப்படுத்தி, மனித சமுதாயத்துக்கு சாந்தி மார்க்கம் காட்டியமைக்கு நபி பெருமானின் அருட்தோற்றம் சாட்சியம் பகர்கின்றது.

பகவானின் பால்ய திருவிளையாடல்களையும், தற்போது புரிந்துவரும் அற்புத, அதிசய லீலைகளையும், அறிபவர்கள் இந்துக்களாக இருந்தால், அவர்கள் பிருந்தாவனத்து பாலமுரளியையும், சனாதனத் தேரின்சாரதியாக அமர்ந்து, அருச்சுனனுக்குக் கீதாவுபதேசம் செய்த கிருஷ்ண பரமாத்மாவையும், ஒப்புநோக்க வேண்டிவர்களாக இருக்கின்றார்கள்.

'உலகாயுதமான பொருள்களில், ஆசை அறுமின்! பற்றுவிடற்கு பரம்பொருளாக விளங்கும் பற்றற்றான் தாளினைப் பற்றுமின்' என்று கூறும் சாயி பகவானின் உபதேசங்களையும், தூயதுறவின் திருக்கோலத்தையும் நோக்குபவர்கள் பௌத்தர்களாய் இருந்தால், அவர்கள் போதி மாதவனின் தம்மபதத்தின் அடிநாதம் அங்கு ஒலிப்பதைக் கேட்கின்றார்கள்.

உபகதைகளும், உவமான, உவமேயங்களும் நிறைந்த பகவானுடைய ஆற்றோட்டமான உபந்நியாசங்களின் உட்கருத்துக்களை உய்த்துணர்பவர்கள், கிறிஸ்தவர்களாக இருந்தால், அவர்கள் இயேசு பெருமானின் மலைப்பிரசங்கத்தை ஞாபகப்படுத்திக் கொள்கின்றார்கள்.

தம் மீது வசைமொழிகளையும், இகழ்மொழிகளையும் கல்மாரியென வாரிவாரி வீசும் 'பண்பாளர்'களின் அறியாமையைக் கண்டிரங்கி, பொறுமையின் பூணமாகப் புன்முறுவல் பூத்து, அவர்கள் மீதும் அன்பும், அருளும் சொரியும் பகவானின் பொன்னான திருவுள்ளத்தை ஆய்பவர்கள் இஸ்லாமியராக இருந்தால், அவர்கள் நபிபெருமானின் திருவுருவை அங்கே மானசீகமாகக் காண்கிறார்கள்.

அன்பே சிவம் என்றால், அருளே ஹரி என்றால், அன்பும் அருளும் பின்னிப்பிணைந்த இன்ப உருவாக, ஹரிஹர மூர்த்தமாக விளங்குகின்றார்சாயி நாதர் என்பதே, அவர்தம் சைவ, வைஷ்ணவ பக்தர்களின் முடிவாக இருக்கிறது.



இவற்றையெல்லாம் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது, ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் தோற்றமும், மனித உருப்பெற்ற பரமாத்மாவின் பரிணமிப்பே என்பது ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி நிர்ணயம் ஆகின்றது அல்லவா?




# 2020 ஊடக அடையாள அட்டை செல்லுபடிக்காலம் நீடிப்பு

## பொலிஸ் தலைமையகம்

ஊடகவியலாளர்களுக்காக அரசதகவல்திணைக்களத்தால் இறுதியாக வழங்கப்பட்ட அடையாள அட்டையின் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதனால், கடந்த வருடத்துக்கான அடையாள அட்டையை வைத்திருக்கும் ஊடகவியலாளர்கள் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரிடமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் கடிதமொன்றை அனுப்பியுள்ள அவர், ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இந்த விடயம் தொடர்பில் அறிவுறுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தால் ஊடகவியலாளர்களுக்காக வழங்கப்படும் அடையாள அட்டைகளை, இம்முறை முழுமையாக வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதனால் கடந்த வருடம் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் காலவரையை நீடித்துள்ளதாக அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் மொஹான் சமரநாயக்க அறிவித்துள்ள நிலையில், கடந்த வருடத்துக்கான அடையாள அட்டைகளை வைத்திருக்கும் ஊடகவியலாளர்கள் ,அவர்களது சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதியை பெற்றுக் கொடுக்குமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸாருக்கும் தெரிவித்துள்ளார்.

# அரசமைப்புக்கு முரணாக அமைந்துள்ள துறைமுக சட்டத்தைத் தோற்கடிப்போம்

## அநுர திட்டவட்டம்



**கொழும்பு துறைமுக நகர சட்ட மூலத்தில் 25 உறுப்புரைகள் அரசமைப்பிற்கு முரணாகக் காணப்படு கின்றன என நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம், அரசமைப்பிற்கு முரணான சட்டமூலத்தை நிறை வேற்றிக் கொள்வதற்கு முன்னெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் முயற்சி ஓரளவு தோற்கடிக்கப்பட்டுள்ளது.**

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலமொன்றில் மூன்றில் ஒரு பகுதி அரசமைப்பிற்கு முரணானவை என நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை இதுவே முதல்தடவையாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் (ஜே.வி.பி.) அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

குறித்த சட்ட மூலத்தில் 16 உறுப்புரைகளை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்றும், எஞ்சிய 9 உறுப்புரைகளும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரமன்றி சர்வஜன வாக்கெடுப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனினும் அரசாங்கம் சர்வஜனவாக்கெடுப்பிற்கு செல்லாமல் சிறு திருத்தங்களுடன் இதனை நிறைவேற்ற முயற்சிக்கும். இந்த முயற்சியும் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ஜே.வி.பி. தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கொழும்புதுறைமுகநகரபொருளாதார ஆணைக்குழு சட்ட மூலம் அரசியல் , பொருளாதாரம் மற்றும் அரசமைப்பு ஆகிய மூன்று முக்கிய காரணிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் அவற்றுக்கு முரணான வகையிலுமே தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தில் காணப்படுகின்ற 25 உறுப்புரைகள் அதாவது சட்ட மூலத்தில் மூன்றில் ஒரு பகுதி அரசமைப்பிற்கு முரணானவை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனவே குறித்த 25 உறுப்புரைகளில் 16 உறுப்புரைகளை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்றும், எஞ்சிய 9 உறுப்புரைகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரமல்ல, சர்வஜன வாக்கெடுப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் சட்டமூலமொன்றில் 25 உறுப்புரைகள் அரசமைப்பிற்கு முரணானவை என்றும் , அவற்றில் 9 உறுப்புரைகள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் முதன்முறையாக நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இதே அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் கூட இந்தளவிற்கு சிக்கல் காணப்படவில்லை. எனவே துறைமுக நகர சட்ட மூலத்துக்கு எதிராக அரசியல் கட்சிகளும் , சிவில் அமைப்புக்களும் நீதிமன்றம் சென்றிருக்காவிட்டால் அரசமைப்பிற்கு முரணான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தின் இந்த முயற்சியை ஓரளவிற்கு தோற்கடித்திருக்கின்றோம்.

நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் இந்த சட்டமூலத்தின் உறுப்புரைகள் பல மக்களின் இறையாண்மைக்கு அப்பாற்பட்டனவாக உள்ளன எனவும், மக்களின் இறையாண்மையை புறந்தள்ளி இதனை நிறைவேற்ற முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு நிறைவேற்றுவதாயின் சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்ல வேண்டியது அத்தியாவசியமானது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் அரசாங்கம் மிகவும் சூட்சுமமான முறையில் அரசமைப்பிற்கு முரணாக செயற்பட முயற்சித்துள்ளது என்பதை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் இறுதியாக ஜே.ஆர்.ஜெயவர்தன ஆட்சியில் மக்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை மேலும் 6 மாதங்களால் நீடிப்பதற்கான திருத்தம் அரசமைப்பில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் இந்த திருத்தத்தை மேற்கொள்ள சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்ல வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதற்கமைய 1982 இல் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இது அரசமைப்பு ரீதியாக சரி என்றாலும் , அரசியல் ரீதியாக மிகப்பெரும் தவறாகும்.

அதற்கமைய அரசமைப்பிற்கு முரணான விடயங்களை மாத்திரமே நீதிமன்றம் சுட்டிக்காட்டும். பொருளாதாரம் மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்பட மாட்டாது.

துறைமுக நகர சட்ட மூலத்தில் இவ்வாறு அரசியல் மற்றும் பொருளாதாரத்துக்கு முரணான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ராஜபக்ஷாக்களின் சொந்த இடங்களை யாருக்கு விற்றாலும் அது குறித்து எமக்கு எவ்வித கவலையும் இல்லை. ஆனால் துறைமுக நகர் என்பது தேசிய சொத்தாகும். அது மக்களின் உரிமையாகும்.

நீதிமன்ற தீர்ப்பின் படி அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 25 உறுப்புரைகளில் சில திருத்தங்களுடன் அதனை நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்கும்.

இந்த முயற்சியும் தோற்கடிக்கப்பட வேண்டும். அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவும் இந்தளவிற்கு அவசரப்படவில்லை.

ஆனால் பாரிய கொவிட் அபாயத்துக்கு மத்தியிலும் துறைமுக நகர் சட்ட மூல விவகாரத்தில் அரசாங்கம் இந்தளவிற்கு அவசரப்படுவதிலிருந்து , அரசாங்கத்தில் உயர் மட்டத்திலுள்ளோருக்கும் சீனாவிற்கும் இடையில் வெளியில் தெரியாத ஓர் இரகசிய ஒப்பந்தம் உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. - என்றார்.

# தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கக்கோரி ரிஷாத் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்



தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை தடுப்பு காவல் உத்தரவில் இருந்து விடுவிக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ரிஷாத் பதியுதீனின் சட்டத்தரணிகளால் குறித்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர், குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் பணிப்பாளர், குறித்த திணைக்களத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கடந்த தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் 3 மாத தடுப்புக் காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# படை வீரர்களுக்கு பதவி உயர்வு

64 கடற்படை அதிகாரிகள் மற்றும் ஏனைய தரங்களில் உள்ள 1,904 அதிகாரிகளுக்கு தர உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன எனக் கடற்படை ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 35 விமானப்படை அதிகாரிகளுக்கு தர உயர்வுகள் வழங்கப்பட்டு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என விமானப்படை ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் 425 இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனைய தரங்களில் உள்ள 4 ஆயிரத்து 289 அதிகாரிகளுக்கு தர உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இவ்வாறு தர உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவர்கள் தங்களது பதவியில் இருந்து அடுத்த கட்டத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாப் பரவலுக்கு மத்தியிலும் 35 பேருடன் இந்திய விமானம் வருகை!

**கொரோனா பரவலுக்கு மத்தியில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடன் இந்திய விமானமொன்று இலங்கையை வந்தடைந்துள்ளது.**

**புதுடெல்லியில் இருந்து வருகைதந்துள்ள ஏர் இந்தியா விமான சேவைக்குச் சொந்தமான இந்த விமானத்தில் 19 இலங்கையர்களும் இலங்கையிலுள்ள இந்திய உயர்தூதரகத்தின் 16 உத்தியோகத்தர்கள் உட்பட 35 பேர் வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்தியாவில் கொரோனா பரவல் அதிகரித்துள்ளதால், இந்தியாவில் இருந்து வரும் பயணிகள் விமானங்களுக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

**இந்த நிலையில், வெளிவிவகார அமைச்சின் விசேட அனுமதியுடன் இலங்கைக்கு வந்த அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.**

# அஸாத்சாலி வைத்தியசாலையில் மாரடைப்பு காரணமாக சேர்ப்பு



கொழும்பு, மே 20

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத்சாலி மாரடைப்பு காரணமாக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அவர் கவலைக்கிடமான நிலையில் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக அசாத் சாலி கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பந்தன், திகாம்பரத்துக்கு மூன்று மாத காலம் விடுமுறை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் ஆகியோருக்கு 3 மாத கால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று (புதன்கிழமை) எதிர்க் கட்சிகளின் அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் சுகவீனமுற்றிருப்பதால் விடுமுறை வழங்குமாறு லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்த நிலையிலேயே அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி மே 18ஆம் திகதி முதல் எதிர்வரும் 3 மாதங்களுக்கு இருவரும் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளாதிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்டார்கள்; 10 பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது!

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்பு நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி கடலில் பூக்களைத் தூவி அஞ்சலி செலுத்தி அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த 10 பேரை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்து, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்து வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வை தலைமை வகித்தவருக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டு அவருடைய வீட்டுக்கு 3 தடவைகள் பொலிஸார் சென்ற போதும், அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவரின் மனைவி அதனைப் பெறமாட்டேன் எனத் தெரிவித்த நிலையில் அவரின் வீட்டின் கதவில் அந்த நீதிமன்ற தடை உத்தரவை பொலிஸார் ஒட்டியுள்ளனர்.

இந்த நிலையில் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட லவக்குமார் செவ்வாய்க்கிழமை பகல் 10 பேருடன் சென்று நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச்சுடர் ஏற்றி அதன் பின்னர் பூக்களை கடலில் தூவினார்.

இதனை படம் எடுத்து முகநூலில் பதிவேற்றம் செய்த நிலையில் பொலிஸார் குறித்த 10 பேரையும் அடையாளம் கண்டு அவர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை 3 நாள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியைப் பெற்று தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.



## வயலுக்கு காவலுக்கு சென்றவர்களை தடுத்து நிறுத்திய இராணுவத்தினர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கிராமங்களில் வாழும் மக்கள் பத்து கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் விவசாயச் செய்கையை. மேற்கொண்டு வருகின்ற நிலையில் வயல் காவலுக்கு கூட செல்வதற்கு படையினர் தடை ஏற்படுத்தியுள்ளமையால் வயல் நிலங்களை காட்டு யானைகள் அழித்துவிடும் அபாயம் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.


குறிப்பாக கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம், களிக்காடு, கோடாலிக்கல்லு போன்ற வயல் நிலங்களுக்கு செல்வதாயின் படையினரின் காவலரண்களை தாண்டியே செல்லவேண்டியுள்ளது.

இந்நிலையில் முள்ளியவளை – நெடுங்கேணி வீதியில் மதவாளசிங்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினர் விவசாயிகளை வயலுக்கு செல்லவிடாமல் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தடுத்து நிறுத்தியுள்ளார்கள்.

இந்நிலையில் இரவு யானைக் காவலுக்குச் செல்லும் விவசாயிகளை படையினர் செல்லவிடாமல் திருப்பி அனுப்பியுள்ளமையால் வயல் நிலங்கள் காட்டு யானைகளால் அழிவை சந்தித்துள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை விவசாயிகள் பலர் தம்மை வயல் காவலுக்கு விடுமாறு கோரி இராணுவ வீதித்தடைக்கு முன்னால் வீதியில் கூடியுள்ளனர் இந்நிலையில் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

## கொரோனாத் தடுப்பூசி அமெ.யிடமும் கோரிக்கை



கொரோனாத் தடுப்பூசிகளை ஏனைய நாடுகளுக்கு வழங்க வுள்ளதாக அமெரிக்கா அறிவித்ததையடுத்து, தடுப்பூசிகளை வழங்குமாறு இலங்கையும் அமெரிக்காவிடம் கோரியுள்ளது.

இலங்கையில் தடுப்பூசிகளின் தேவை அமெரிக்க அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று அமெரிக்காவால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்ஹ தெரிவித்தார்.

ஏப்ரல் 26ஆம் திகதி அமெரிக்கா 6 கோடி டோஸ் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளைத் தேவைப்படும் நாடுகளுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது என்று அறிவித்தது.

இதனையடுத்து, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கொழும்பில் உள்ள அமெரிக்க தூதர் அலைனா பி.டெப்லிட்ஸ் மூலமாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலமாகவும் வெளிவிவகாரத்துறை மற்றும் தேசியப் பாதுகாப்பு சபை ஆகியவை இது தொடர்பாக இலங்கையின் தேவைகளை அமெரிக்க அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளன என ரவிநாத் ஆரியசிங்ஹ தெரிவித்துள்ளார்.

ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு முன்பு முதல் டோஸ் எடுத்தவர்களுக்கு 6 லட்சம் டோஸ் அஸ்ட்ராஜெனெகா அவசரமாக வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## அடையாள அட்டை முறையை கடைப்பிடிக்காத 99 பேர் கைது

கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 340 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் அடையாள அட்டையின் இறுதி இலக்க முறையை கடைப்பிடிக்காத குற்றச்சாட்டில் 99 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

அதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரையில் 10 ஆயிரத்து 413 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று ஒற்றை இலக்க தினம் எனவும் அதனால் அடையாள அட்டையின் இறுதி இலக்கம் 1, 3, 5, 7 மற்றும் 9 ஆகிய இலக்கங்களை கொண்டவர்கள் மாத்திரமே வெளியில் செல்ல முடியும் எனவும் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் 24 மணி நேரத்தில் 55 கொரோனாத் தொற்றாளர்கள்

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 55 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்தார்.

24 மணி நேரத்தில் 530 ரபீட் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதில், வாழைச்சேனை பிரதேசத்தில் 25 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 55 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு சுகாதார பிரிவில் 08 பேரும் களுவாஞ்சிகுடி சுகாதார பிரிவில் 03 பேரும் ஆரையம்பதி சுகாதார பிரிவில் 03 பேரும் சுகாதார பணியாளர்கள் 04 பேரும் சிறைக்கைதிகள் 02 பேருமாக 55 பேர் கொரானா தொற்றுக்குள்ளகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இறுதி வாரத்தில் 235 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மூன்றாவது அலையின் காரணமாக இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 268 அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 587 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த வைரஸால் 12 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும் மயூரன் தெரிவித்தார்.

## கொழும்பு துறைமுக நகர சட்டமூலத்தை செயற்படுத்த இது உகந்த நேரம் அல்ல

### விஜேயதாஸ வலியுறுத்து



கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை செயற்படுத்த, இது சரியான நேரம் இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர் -

இதற்குப் பதிலாக ஒவ்வொரு நாளும் கணிசமான உயிரிழப்பை ஏற்படுத்தும் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவதில் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்த அரசாங்கம் தற்போதைய நெருக்கடியை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி மிகவும் சிந்திக்காமல் அதனை ஒதுக்கி வைத்து துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை செயற்படுத்துவதில் முனைப்புக் காட்டுவதாகக் குற்றம் சாட்டினார்.

அரசியல்வாதிகள் மிகவும் நெகிழ்வானவர்களாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பாக மற்ற கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து எதிர்ப்பதற்குப் பதிலாக மக்கள் மீதான அக்கறையோடு பேசும் அவர்களை அழைத்து கலந்துரையாட வேண்டும் என்றும் கூறினார்.

தற்போதைய இலங்கை அரசமைப்பிற்கு முரணாக இருக்கும் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் 29 திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

நெல்லிற்கு ஏற்படும் இலை வெளிறல் அல்லது இலைக்கருகல் ஆனது பக்ரீரியாவினால் ஏற்படுகின்றது.

இந்நோயை சரியாக ஆரம்பப் பருவத்திலேயே இனங்கண்டு நெல்லைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாத போது முழு பயிர்களும் அழிவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

நோய் வந்த பின் பரிகாரம் காண்பதை விட நோய் வராமல் தடுப்பதே புத்திசாலித்தனமாகும். இதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

1. அத்தாட்சிப்படுத்திய விதை நெல்லைப் பயன்படுத்தவும்.
2. நீர் அதிகளவிற் காணப்படும் வயலாயின் அதிக மழைக் காலத்தை தவிர்த்து பயிரை ஸ்தாபிக்கவும்.
3. வயலை நன்றாக மட்டப்படுத்தவும்.
4. ஒழுங்கற்ற முறையில் நீர்தேங்கி நிற்பதைத் தவிர்க்கவும்.
5. நோயைத் தடுக்க பயிர் சுழற்சி முக்கியமாகும்.



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத் தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர்.
‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர்.
இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் 09

**37. நீதியரசர் விக்னேஸ்வரன் சொல்லும் இனப்படுகொலை என்பது வித்தியாசமானதா?**

இல்லை, அவரும் இனப்படுகொலை என்பதற்கான ஐ.நாவின் சட்டத்தின் அடிப்படையில் தான் பேசுகிறார். நடந்தது, நடப்பது இனப்படுகொலை என்பதால், தமிழ் மக்களைப் பாதுகாக்க சர்வதேசம் பொறுப்பெடுக்க வேண்டும் எனக் கோருகிறார். இதன் பொருட்டு வட மாகாண சபையின் தலைவராக இருந்தபோது பெப்ரவரி 2015 இனப்படுகொலை என்ற தீர்மானத்தை ஒப்பேற்றி ஐ.நா. மனித உரிமை மன்றுக்கும் ஐ.நாவுக்கும் அனுப்பினார். அந்தத் தீர்மானம் 2015இல் தமிழ் மக்களிடம் அமோக வரவேற்பைப் பெற்றது, அந்த நேரத்தில் நீதியரசர் மாலையிட்டு அரசியலுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒற்றுமையாக இருந்தது. மார்ச் 2015இல் மனித மன்றும் கூட இருந்தது. மனித உரிமை மன்று அந்த தீர்மானத்தை ஆராய்ந்து அதன் அடிப்படையில், சிறிலங்காவில் ஐ.நாவின் ஊடாக, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தவேண்டும் என்று கேட்டது.

ஐ.நா.மனித உரிமை மன்றத்தில், மனித உரிமையாளரின் சிறிலங்காவிற்கான ஆய்வகம் (United Nations Office of the High Commissioner for Human Rights Investigations on Srilanka (OISL), மனித உரிமை மீறல்கள் பற்றி ஆராய்வதற்கென நிறுவப்பட்டிருந்தது. ஆராய்வதற்கென பணிக்கப்பட்ட காலம் பெப்ரவரி 2002இல் இருந்து நவம்பர் 2011 வரையானது. அந்தக் காலப்பகுதிக்கான, அட்டூழியங்களால் எழுந்த சர்வதேச குற்றவியல் சட்ட மீறல்களே மட்டுமன்றி, தமிழினப் படுகொலை படிப்படியாக 1948இல் இருந்து அரங்கேறியுள்ளது. அதன் கோரமான தாக்கம் 2009 இல் நடந்தது என்றும் சமர்ப்பித்தார்கள். அதற்கான சாட்சியங்களையும் மேலெழுந்த வாரியாக சுட்டிக் காட்டியது. ஆனால் ஐ.நாவின் மனித உரிமை மன்றோ அன்றில் அங்கத்துவ நாடுகளோ ஐ.நாவிற்கு பாரப்படுத்தும் பரப்புரையையோ தீர்மானத்தையோ மேற்கொள்ளவில்லை.

ஸ்ரீலங்கா அரசின் ஒத்துழைப்புடன் நல்லாட்சி காலத்தில் இவை பார்க்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் கூட்டமைப்பு பிரிந்து நிற்கும் காலத்தில் அது இனப்படுகொலை என்ற அடிப்படையில் சமர்ப்பிக்கப்படவில்லை. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என்றே தீர்மானம் சொல்லுகிறது. அப்படியான கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை என்ற ஒன்று இன்னும் சர்வதேச சட்டங்களுக்கு அமைய குற்றமாக கருதப்படவில்லை என சுமந்திரன் பல இடங்களிலும் கருத்துத் தெரிவிக்கிறார். அந்த தீர்மானத்தை பார்க்கும்போது கட்டமைக்கப்பட்ட (Structured) இனப்படுகொலை என்ற வார்த்தையை காணமுடியவில்லை. ஆனால் 1948இல் இருந்து நடந்தவையாலும் கட்டம் கட்டமாக நடந்தவற்றை பிரதிபலிப்பதாலும் அவ்வித அபிப்பிராயங்கள் எழலாம்.

**கட்டமைப்பு இன அழிப்பு செயல்கள் (Structurd Genocide) என்றால் என்ன?**

ஒரு இன மக்களை, அவர்களின் இனமென்ற காரணத்திற்காக கொலை செய்வதை தவிர, ஓர் இன அழிப்பை அல்லது, இனச் சுத்திகரிப்பை அடையும் நோக்கத்துடன் புரியப்படும் செயல்கள் கட்டமைப்பு இன அழிப்புச் செயல்கள் எனப்படும்.

போருக்கு பின்னாலான, ஓர் உதாரணத்தை சொல்வதானால் தமிழ் மக்களின் பூர்விக வாழ்வுகளை உறுதிப்படுத்தும் வழிபாட்டுத் தலங்கள், கோவில்கள், வரலாற்று மையங்களை திரிபுபடுத்தி அவற்றை ஆக்கிரமிக்க தொல்பொருள் திணைக்களம் ஒன்றை நிறுவி, அதனை ஆயுதப் படைகளின் ஒத்தாசையோடு அமுல்படுத்துவது திட்டமிட்டு நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட இனக் கொலையாகும்.

அந்த அடிப்படையில் காலைக்கதிரின் 18ஆம் திகதியிட்ட பதிவில் முன்னாள் கொழும்பு பல்கலைக் கழகத்தில் சட்டத்துறை விரிவுரையாளராக பணியாற்றிய தம்பு கனகசபை குறிப்பிடுகிறார்.

**39. மிக அண்மையில் ஒரு நேர்காணலில் சுமந்திரன் இலங்கையில் நடந்ததும் நடப்பதும், இனப்படுகொலையே என்று சொல்லி முரண்பாடாக அதை நிரூபிப்பதற்கு எங்களிடம் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று சொல்லியுள்ளாரே?**

ஆம், நானும் அதனை பார்த்தேன். அதைப் பற்றி அவரிடம் சிறிது அளவளாவினேன். பத்திரிகை பதிவுகள் சில வித்தியாசமான எண்ணங்களை ஏற்படுத்தலாம். ஆனபடியால்தான் அந்த நேர்காணலின் முழு பிரதியையும் அனுப்பி வைக்கிறேன் என சொல்லி உடனேயே அனுப்பி விட்டார். நேர்காணல் முழுவதையும் பார்த்தேன். அனுசரணை தரும் நிர்மலா யோசப்பிடமும் கொடுத்து, அவர் தனது பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடம் கொடுத்து நீதியரசர் விக்கினேஸ்வரனின் தீர்மானத்தையும் ஒட்டி சில கருத்துரையாடல் செய்து அபிப்பிராயங்கள் தந்தார்.

சுமந்திரன் பேசியதில் யதார்த்தமிருந்தது. அதாவது 1948இல் இருந்து தமிழர்களுக்கு நடந்தவற்றை இனப்படுகொலை என நிரூபிக்க வேண்டுமானால் அது திட்டமிட்டு நடந்தது என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் வேண்டும். முக்கியமாக, அந்த காலங்களில் நடத்தவற்றின் உள் நோக்கங்கள் (Intention) என்பது



இனப்படுகொலையே என நிரூபிக்கப்பட வேண்டும். அதற்காக ஆதாரங்கள் ஒரு நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் இல்லை. டி.எஸ். சேனநாயகா, பண்டாரநாயக்கா, ஜெயவர்த்தனா, பிரேமதாஸ, சந்திரிகா ராஜபக்ஷ போன்ற பிரதமர்கள், ஜனாதிபதிகளின் மனங்களில் எல்லாம் ஒரு இனப்படுகொலை செய்வதுதான் முன்னோங்கி இருந்தது என்பதை எம்மால் நிரூபிக்க முடியுமா? இதனைத்தான் விளங்கப் படுத்துகிறேன். அதனை நான் இனப்படுகொலை நடக்கவில்லை என்று அரசியலுக்காகக் கூறுகிறேன் எனப் பிரசாரம் செய்கிறார்கள் என்று ஆதங்கப்பட்டார்.

உள் நோக்கம் (Intention)என்பது திடமாக தமிழ்த் தரப்புக்களால் ஆராயப்பட வேண்டும், நிரூபிக்கப்பட வேண்டும் என்று முன்னரே சொல்லியிருக்கிறேன். ஒரு பூர்வாங்க ( Preliminary) நோக்கில் அந்த பார்வை கவனிக்கப்பட வேண்டியதாக பட்டது. ஆனால் அதற்காக இனப்படுகொலை இல்லை என்ற நிலைப்பாட்டில் அவர் இருக்கிறார் என எனக்குத் தோற்றவில்லை.

**40. இனப்படுகொலை என்று நிரூபிப்பதற்கு உள் நோக்கம் என்ற பதத்தினை வேறு வழிகளில் நியாயப் படுத்த முடியாதா?**

ஒரு கொலையை நேரடி சாட்சியங்களால் மட்டுமல்ல, சந்தர்ப்ப சாட்சியங்களாலும் நிரூபிக்க முடியும். அது போல் உள்நோக்கினை சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்களாலும் நிரூபிக்கலாம். மேலும் ஒரு பதத்திற்கோ, சொல்லுக்கோ அதன் பொருளை ஆராயும் போது, சட்டத்தில் உள்ளவாறே பொருள் காணல் (Literal rule) என்பதற்கு பதிலாக, எந்தத் தவறை தவிர்க்க அந்தச் சட்டம் உருவாக்கப்பட்டதோ அதன் பொருட்டு பொருள் தேடுவது (Mischief rule) என்ற வழியில் கையாளவும் முடியும்.

ருவாண்டா, சிரியா போன்ற நாடுகளின் அட்டூழியங்களையும் இனப் படுகொலைகளையும் அணுகிய போது ஐ.நா. சட்டத்தின் நோக்கம் என்ன என்ற அடிப்படையிலேயே அதுசென்றது. நிரூபிக்கப்பட வேண்டும் என்று வாதிடப்பட்ட செயல் முறைகளில் அவை அதிக தீவிரம் காட்டவில்லை. அப்படியான ஒரு நிலைப்பாட்டில் தசாப்தகாலமாக அரங்கேறி வரும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டு வருகின்ற மக்களுக்கு ஒரு நியாயமான, நிலையான தீர்வு ஒன்றினை எட்ட எமது அரசியல்வாதிகளும் சட்டவாளர்களும் முயற்சிக்க வேண்டும். அதற்காக இரண்டு வேறுபட்ட விடயப் பொருள்களில் நாம் தெளிவு பெற வேண்டும்.

ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற, இடம்பெறுகின்ற அட்டூழியங்கள் ஓர் இனத்தை ஓரங்கட்டி, சுத்திகரித்து, கொலை செய்து, அடங்கி அல்லது அடக்கி, உரிமையற்று வாழ வைப்பது என்பதை சட்டவாளர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள். இதனை எந்த ஒரு தீர்ப்பாயமும், நிராகரிக்க பின்தங்கும். ஆனவே பிரதான பொருள் (Substantive matter) எம்மிடம் உண்டு. ஒரு நீதிமன்றுக்கோ, தீர்ப்பாயத்துக்கோ கொண்டு செல்லக் கூடிய வழக்கு இந்த பிரதான பொருளில் அமைகிறது. அடுத்ததாக இந்த விடயத்தினை ஒரு சர்வதேச தீர்ப்பாயத்துக்கு முன் நிறுத்தி நீதியை பெறுவதற்கான நடைமுறை பொறிமுறைகளை (Procedural Mechanism) ஆராய்தல் வேண்டும். நிகழ்கால விவாதங்களில், அரசியல் இலாபங்களுக்காக இவ்வாறான நடைமுறை வழி வகைகளை ஆராயாமல் தொழில்நுட்பப் பதங்களில் உள்ள சிக்கல்களைப் பெரிது படுத்தி குழப்பம் தருவது பிரயோசனமற்றது.

**41. இந்த மூன்று கட்சிகளின் தலைவர்களும் சில சிவில் சமூக அமைப்புகளும் சேர்ந்து ஒன்றாக தமிழர்களுக்கு நடந்த அட்டூழியங்களை ஐ.நா. மனித உரிமை மன்றினால், ஐ.நாவின் காரியதரிசியின் ஊடாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என்று கடிதம் சமர்ப்பித்தார்களே?**

ஆம். அது நடந்தது. தமிழ் பிரதிநிதிகள் ஒற்றுமையாக ஒன்றைக் கேட்கிறார்கள் என்ற எதிர்பார்ப்பும் மக்களிடையே இருந்தது. இது ஏன் நடந்தது என்ற அனுமானம், முன்னரே எனக்கு இருந்தது. சுமந்திரனுடன் பேசியதில் அதற்கான கரணங்கள் மேலதிகமாகப் புரியத் தொடங்கியது.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# ‘போர்ட் சிட்டி’ வேலைவாய்ப்பில் 75 சதவீதம் இலங்கையர்களுக்கு

## சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பித்து மஹிந்த உரை; கட்சி பேதமின்றி ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள்



கொழும்புத் துறைமுக நகரத்தில் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளில் குறைந்தது 75 சதவீதமாவது இலங்கையர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம். எனவே, எமது நாட்டை நேசிக்கும், நாட்டின் எதிர்காலப் பயணத்தை ஆசீர்வதிக்கும் அனைத்து உறுப்பினர்களையும் கட்சி பேதமின்றி இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவை நிறுவும் சட்டமூலத்தை இன்று இந்தச் சபையில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப் புதிய கொழும்பு துறைமுக நகரத்தின் கட்டுமானம் கடந்த 2014 செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி, நான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதென்று என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த கட்டுமானத்திற்கு சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதி சீ ஜின் பிங் மற்றும் இலங்கை ஜனாதிபதியான எனது தலைமையிலேயே அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

அவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாரிய திட்டத்தின் மூலம் இன்று 269 ஹெக்டேயர் நிலப்பரப்பை இலங் கையுடன் இணைப்பதற்கு முடிந்துள்ளது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம்.

அப்புதிய நிலப்பரப்பு 2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முந்தைய அரசால் கொழும்பு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதுடன், இதுவரை ‘கொழும்பு துறைமுக நகரம்’ என்று குறிப்பிடப்படுவதன் மூலம், இலங்கை பொருளாதாரத்திற்கு பெரும் வாய்ப்புகள் பலவற்றை பெற்றுக்கொள்ள எமக்கு ஒரு மதிப்புமிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் முழு பலன்களையும் பெறுவதற்கு, இந்த நகர்ப்புற வளாகத்தின் மூலம் பாரிய முதலீடுகளை நாட்டினுள் ஈர்ப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் வணிகக் கட்டமைப்பை சரியாக நிறுவ வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்ய அரசுக்கு இப்போது ஒரு சிறப்பு பொறுப்பு உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த கட்டமைப்பை நமக்கு சரியாக தயாரிக்க முடியுமாயின், அதனூடாக நமது நாட்டின் பொருளாதாரத்துக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 1,500 கோடி அமெரிக்க டொலர் முதலீட்டை பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது எனப் பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, புதிய நகர கட்டுமானப் பணிகளின் ஊடாக முதல் 5 ஆண்டுகளில் சுமார் இரண்டு இலட்சம் வேலைவாய்ப்புகள் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க முடியும். மேலும், முதல் ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக சுமார் எண்பத்து மூவாயிரம் புதிய நிரந்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் வாய்ப்புக் கிட்டும் என பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

உலகின் எந்த நாட்டிலும் தங்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இன்று முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு உள்ளது. இதேவேளை, அந்நிய முதலீட்டை ஈர்க்க இன்று உலகில் நிறைய போட்டி நிலவுகின்றது. எனவே, முதலீடுகளை எதிர்பார்க்கும் நாடுகளிலிருந்து முதலீட்டாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்கக் கூடிய ஊக்கத்தொகை, வசதிகள் மற்றும் சேவைகள் என்பன மிக உயர் மட்டத்தில் காணப்பட வேண்டும்.

கொழும்பு துறைமுக நகரத்திலும் அவ்வாறு இடம்பெற வேண்டுமாயின், தமது செயற்பாடுகள் மற்றும் பொறுப்பை சிறப்பாகச் செய்யும் திறமையான ஆணைக்குழுவால் இந்த நகரம் நிர்வகிக்கப்பட வேண்டும்.

அத்துடன் இப்புதிய நகரத்தில் முதலீடு செய்ய முன்வரும் அனைத்து முதலீட்டாளர்களும் எவ்வித தடைகளும் இன்றி புதிய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உகந்த வணிகச் சூழல் அமைய வேண்டும்.

இதேவேளை, இந்தத் துறைமுக நகரத்தில் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளில் குறைந்தது 75 சதவீதமாவது இலங்கையர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையர்களுக்குத் தேவையான சிறப்புத் திறன்கள் இல்லாத சில சந்தர்ப்பங்களில், இந்த நிலையை தளர்த்த ஆணைக்குழுவுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று நம்புகின்றோம். அதன்படி, இதுபோன்ற விசேட சந்தர்ப்பங்களில் இந்த நிலையை தளர்த்த அவர்களுக்கு அதிகாரம் அளித்து, ஏராளமான இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்காக இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய நகரத்தை கட்டியெழுப்புவதற்கான அரசின் முயற்சிகளுக்கு, இன்றைய எதிர்க்கட்சியிலிருந்தும் கூட, நாட்டுக்கு ஒரு புதிய உத்வேகத்தை வழங்க நீங்கள் தொடர்ந்து ஆதரவளிப்பீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். நீங்கள் அனைவரும் அவ்வாறு செய்தால், அதுவே சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் அனுப்பும் சிறந்த செய்தியாகும். அத்தகைய செய்தியின் மூலம் நம் நாட்டுக்குள் ஈர்க்கப்படும் முதலீட்டின் அளவு வேகமாக அதிகரிக்கும் என்று நாம் உறுதியாகக் கூறலாம். அப்போது இந்தத் திட்டத்தின் வெற்றியை நாம் அனைவரும் கட்சி பேதமின்றி அனுபவிக்க முடியும்.

எமது நாட்டை நேசிக்கும், நாட்டின் எதிர்காலப் பயணத்தை ஆசீர்வதிக்கும் அனைத்து உறுப்பினர்களையும் கட்சி பேதமின்றி இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை!

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை வங்காள விரி குடாவின் கிழக்கு கடற்பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வங்காள விரிகுடாவின் கிழக்கு கடற்பிராந்தியத்தை அண்மித்த பகுதியில் மே 23ஆம் திகதி தாழமுக்க நிலை மேலும் வலுவடைவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

மன்னார் தொடக்கம் கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பிராந்தியங்களில் இடைக்கிடையே மழையுடனான வானிலைநிலவும் எனவும், காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் வரையிலான கடற்பிராந்தியத்தில் மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வரை காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலி தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிராந்தியங்களிலும் காங்கேசன்துறை ஊடான கடற்பிராந்தியத்திலும் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 50 முதல் 55 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கோயில் திருட்டில் ஈடுபட்ட மூவர் சிக்கினர் திருட்டுப் பொருள்களும் மீட்கப்பட்டன

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி –குளக்கட்டு விநாயகர் கோயிலில் திருட்டில் ஈடுபட்ட மூவரை யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்தனர்

குளக்கட்டு விநாயகர் கோயிலில் கடந்த 9ஆம் திகதி திருவிழா இடம்பெறவிருந்த நிலையில் 7ஆம் திகதி இரவு குறித்த கோயி லுக்குள் உள்நுழைந்த இருவர் அங்கு மூலஸ்தானத்தில் இருந்த மந்திரத்தகடு, கோயில் பிள்ளையாரின் இரு முடிகள் மற்றும் 2 பவுண் நகைகள் உட்படப் பல பெறு மதியான பொருள்களைத் திருடிச் சென்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகள் மற்றும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பண்டத்தரிப்பு, வடலியடிப் பகுதியை சேர்ந்த 60 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் பெறப்பட்ட தகவலின்படி தாவ டிப் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டார்.



குறித்த கொள்ளைச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைச் சேர்நத 48 வயதுடைய நபர் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மூவரிடம் மேற்கொண்ட விசாரணை களில் திருடப்பட்ட பொருள்களை விற்றுப் பெறப்பட்ட 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பணமும், உருக்கப்பட்ட நகைகளும், வெட்டப்பட்ட நிலையில் இருந்த இரு முடிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

# வெளிநாட்டு முதலீடு, வேலைவாய்ப்பு துறைமுக நகர் சட்டத்தால் கிடைக்கும்

## நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பெருமிதம்

துறைமுக நகரத்தின் ஊடாக வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் பல தொழில் வாய்ப்புகள் மக்களுக்கு கிடைக்கப்பெறும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அந்தவகையில் எதிர்வரும் 5 வருடங்களில் 1,500 கோடி டொலர் முதலீடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் 2 லட்சம் வேலைவாய்ப்புக் கள் கிடைக்கும் என்றும் அவர் கூறி னார்.



அடுத்த 5 வருடங்களில் 83 ஆயிரம் அமெரிக்காவை அடிப்படை யாக கொண்ட தொழில் வாய்ப்புக் கள் கிடைக்கும் என்றும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை காரணமாக இலங்கையில் உள்ள மக்கள் துறை முக நகரத்தில் பணிபுரிந்து டொல ரில் சம்பளத்தை பெற்றுக்கொள்வ தற்கு வாய்ப்பு கிட்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் எதிர்க்கட்சிகள் கூறுவ தைப்போல துறைமுக ஆணைக் குழுவினால் நிதி மோசடி இடம் பெறாது என்றும் இராஜாங்க அமைச் சர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட் டார்.

ஆகவே நாடாளுமன்றில் இடம் பெறும் வாக்கெடுப்பின்போது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# வாகன விபத்துக்கள் மேலும் அதிகரிப்பு

வாகன விபத்துக்களில் மீண்டும் அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கடந்த செவ்வாய்க்கிழமை மாத் திரம் வாகன விபத்துக்களில் 9 பேர் உயிரிழந்துள் ளனர் என அவர் தெரிவித்தார்.

இதில் 3 பேர் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் 5 பேர் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்துக் களில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் எனவும் மற்றுமொருவர் சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற விபத்தில் காய மடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் எனவும் அவர் தெரிவித்தார்.

வாகன விபத்துக்களில் அநேகமானவை மோட்டார் சைக்கிள் விபத்துக்களாகப் காணப் படுகின்றன எனவும் சீரற்ற காலநிலை காரண மாக இத்தினங்களில் வாகன விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதி பருமான அஜித் றோஹண தெரிவித்தார்.



# அரசின் இயலாமை, பொறுப்பற்ற தன்மையே தொற்றாளர்கள் அதிகரிப்பதற்குக் காரணம்

## அகிலவிராஜ் காரியவசம் சாடல்

கொவிட் கட்டுப்படுத்தல் செயற்பாடு களில் அரசாங்கம் பொறுப்புடன் செயற் படவில்லை. பொறுப்புடன் செயற்பட் டிருந்தால் இந்தியாவிலிருந்து 3 ஆயிரம் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டிருக்க மாட்டார்கள்.

அரசாங்கத்தின் இவ்வாறான பொறுப் பற்ற செயல்கள் காரணமாகவே இன்று வைத்தியசாலைகள் தொற்றாளர்களால் நிரம்பியுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் அகிலவிராஜ் காரியவசம் குற்றம் சுமத்தினார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நிலை மைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

1 கோடி கொவிட் தடுப்பூசி பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. எனவே, அவற் றைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் துறையினர் நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தடுப் பூசிகளை கொள்வனவு செய்வதற்கு அனுமதியளிக்குமாறு பல தனியார் நிறு வனங்கள் கோரிக்கை விடுத்தன. அத் தோடு தடுப்பூசியை கொள்வனவு செய்து அரசாங்கத்துடன் இணைந்து அதனை மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் அவை கூறின. ஆனால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வில்லை.

ஆனால் இன்று இதனை செய்ய முடி யாமல் தோல்வியுற்று இப்போது தனியார் துறையிடம் கோரிக்கை விடுக்கிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கொவேக்ஸ் திட்டத்தின் ஊடாக இலங்கை சனத் தொகையில் 20 வீதமானோருக்கு தடுப் பூசியை பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் சுகாதார அமைச்சர் கூறிய இந்த விடயம் உண்மைக்கு புறம்பானவை என்பது எமக்குத் தெரியும். நாடாளுமன் றத்தில் இவ்வாறு கூறியதன் பின்னர் 2021 ஜனவரி மாதத்திலேயே அவர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். உரிய நேரத்தில் அரசாங்கம் இதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

18 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப் பூசியை வழங்கத் தீர்மானித்தால் இரு தடவைகள் வழங்குவதற்கு இலங்கைக்கு 3 கோடி தடுப்பூசிகள் தேவையாக வுள்ளது. ஆனால் இராஜாங்க அமைச் சர் சுதர்ஷினி 1 கோடி மாத்திரமே தேவை என்று கூறுகின்றார்.

அவ்வாறெனில் எஞ்சிய 2 கோடி தடுப்பூசிகளை கொள்வனவு செய்யப் போவதில்லையா? எனவே இதுவரை யில் எவ்வளவு தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக் குத் தெரியப்படுத்த வேண்டும்.

அவை எப்போது நாட்டுக்கு கிடைக்கப் பெறும் ? எஞ்சிய தொகையை பெற்றுக் கொள்ள என்ன செய்வது ? உள்ளிட்டவை தொடர்பில் அரசாங்கம் தெளிவாகக் கூற வேண்டும். நாட்டு மக்கள் அபாயமான நிலையிலுள்ளனர். பெப்ரவரியில் 18 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் ஏப்ரல் மாதமளவில் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் கொவிட் பரவல் குறைவடைந்துள்ளதாக மக்கள் எண்ணினார்கள். சுகாதாரத் தரப்பினர் கூறியமையைப் போன்று போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்காமையால் இன்று இந்த நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

அரசாங்கம் இது தொடர்பில் பொறுப் புடன் செயற்படவில்லை. உண்மையில் பொறுப்புடன் செயற்பட்டிருந்தால் இந்தி யாவிலிருந்து விமானம் மூலமாக 3 ஆயி ரம் பயணிகள் அழைத்து வரப்பட்டிருக் கமாட்டார்கள்.

அதே போன்று உக்ரேன் பிரஜைகளும் நாட்டுக்கு வந்திருக்க மாட்டார்கள். இன்று வைத்தியசாலைகளில் கொவிட் தொற் றாளர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளமைக்கு அரசாங்கம் பதில் கூற வேண்டும். – என்றார்.

### குடிவரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும், அத்தியாவசிய தேவைகளுக்காக வேலை நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரையில் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக உரிய பிரிவைத் தொடர்பு கொண்டு, ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடவுச்சீட்டுப் பிரிவு – 070-7101060 , 070-7101070, குடியுரிமைப் பிரிவு – 070-7101030, வெளிநாட்டுத் தூதரகப் பிரிவு – 011-5329233, 011-5329235, விஸா பிரிவு – 070-7101050, துறைமுகங்கள் பிரிவு – 077-7782505.

### ஒரேநாளில்...

இதன்படி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்க ளின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 51 ஆயிரத்து 343 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 367 பேர் மீண்டுள்ளனர். 27 ஆயிரத்து 925 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அசுர வேகத்தில் அதிகரித்து வருகின் றது. அதேவேளை, கொரோனாவால் மரணிப்பவர்க ளின் எண்ணிக்கையும் நாள்தோறும் உயர்வடைகின் றது. இது மக்களிடத்தில் பேரச்சத்தை ஏற்படுத்தியுள் ளது.தொற்றாளர்களை உடனே அடையாளம் காண் பதற்காக பி.சி.ஆர். பரிசோதனைகளும் நாடெங்கும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டவர்களுக்கு இந்நாட்டில் ஈழ அரசு உருவாக்க சட்டமியற்றவே அரசு முனைகிறது

## பாட்டலி சம்பிக்க இப்படிக் கூறுகிறார்

எமது நாடு துரதிஷ்டவசமான நிலையில் இருக்கின்ற இக்காலக்கட்டத்தில், வெளிநாட்ட வர்களுக்கு இந்நாட்டில் ஈழ அரசு உருவாவதற்குத் தேவையான சட்டங்களை இயற்றிக்கொள்வதற் காக அரசாங்கம் நாடாளும ன்றத்தை கூட்டி யுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அரசாங்கம் மீது குற்றஞ்சாடினார்.

யுத்த வெற்றிக்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரர்களை நினைவு கூரும் நிகழ் வொன்று கடந்த செவ்வாய்க்கிழமை பொரளையில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித் தார். அவர் அங்கு மேலும் கூறுகையில் –

‘கொவிட் 19 அச்சுறுத்தலால் நாடு முடக்கப் படவேண்டிய சூழலில், நாட்டின் இறையாண் மையை காட்டிக்கொடுத்து, நாட்டின் ஒற்றுமைக் குத் துரோகம் இழைத்துவிட்டு வெளிநாட்டு அரசு ஒன்றை உருவாக்குவதற்கானசட்டத்தை இயற்றிக்கொள்வதற்காக அரசாங்கம் அடுத்த மூன்று நாள்களும் செயற்படவுள்ளது. தனித் தனியாக சட்டம் இயற்றிக்கொண்டு, தனியான வரியை வசூலித்துக்கொண்டு, வெளிநாட்ட வர்களுக்குச் சொந்தமான தமிழீழ அரசை உருவாக்குவதற்கான வழிவகைகளை அரசாங் கம் செய்து வருகிறது. – என்றார்.

‘நாங்கள் தமிழீழத்துக்கு எதிரானவர்கள், அதைப்போலவே, வெளிநாட்டவர்களின் ஈழம் ஒன்று தோன்றுவதற்கும் நாங்கள் எதிரானவர்கள். நமது நாடு எதிர்காலத்தில் போருக்கான மத்திய நிலையம ாக மாற்றமாகலாம். உலக சக்திகளிடம் அகப்பட்டு பாரிய அழிவைச் சந்திக்க நேரிடலாம்.

உலக வல்லரசுகளின் பிரச்சினைகளுக்கு இலங்கை தலையிடும் வகையிலும், வெளிநாட்டு விமான செயற்பாடுகளுக்கு, வெளிநாட்டு கடற் படை விவகாரங்களுக்கு, வெளிநாட்டு பணம் இலங் கையில் வைப்பிலிடச் செய்யவும், வெளி நாட்டவர் களுக்குச் சொந்தமான காலணித்துவமாக துறைமுக நகரை நாட்டில் நிர்மாணிப்பதற்கு அர சாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப் பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுபான்மையினர் அநீதி இழைக்கப்பட்டது என உணர்ந்தால் யுத்த வெற்றிக்கு அர்த்தமில்லை




சிறுபான்மையின மக்கள், தங்களுக்கு இந்நாட்டில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக உணர்வார்களாயின் யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவந்து பெற்றுக்கொண்ட வெற்றி முழுமையடையாது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (புதன்கிழமை) உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

இராணுவத்தினரின் உயிர்த்தியாகத்துக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த சமாதானத்துக்கு நாம் என்றும் தலை வணங்குகிறோம்.

எனினும், நாட்டில் இன்றும் ஒரு தரப்பினர் தங்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகத் தெரிவிப்பார்களாயினும் எமது நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது போய்விடும்.

எனவே, அந்தத் தரப்பினரின் குரலுக்கும் செவிசாய்க்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

விசேடமாக ஒருமித்த நாட்டுக்குள் 13 ஆவது திருத்தச்சட்டத்தை இதேபோன்று நடைமுறைப்படுத்த வேண்டும்.

சிறுபான்மையினருக்கும் ஏனைய மதத்தினருக்கும் சம உரிமையை வழங்க வேண்டும். அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண வேண்டும்.

இதன் ஊடாகவே நாம் பெற்றுக் கொண்ட சமாதானத்துக்கு முழுமையான அர்த்தம் கிடைக்கும். நாம் பெற்றுக் கொண்ட வெற்றியும் நிலைத்து நிற்கும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொகவந்தலாவையில் 27 தொற்றாளர்கள்

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் புதிதாக 27 கொரோனாத் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர். முடிவுகளின் படி குறித்த தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கதிர்வேல் ஜெ.கணேஷ் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள நோர்வூட் சென் ஜோன் டிலரி, ஹற்றன் என்பில்ட், நோர்வூட் பிலின்கபொனி, படல்கல, பொகவந்தலாவ டின்சின், செபல்டன், எல்டொப்ஸ் ஆகிய தோட்டங்களில் குறித்த 27 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

புதிய நோயாளர்கள் 27 பேருடன் நெருங்கி பழகியவர்களை சுய தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தனிமைப்படுத்தப்பட்டுள்ள இன்ஜஸ்டிரி கிராம சேவகர் பிரிவிற்குச் சொந்தமான பிலின்கிபொனி தோட்டத்தின் பாத்பொட் பிரிவில் நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் கொவிட் தொற்று உயிரிழந்துள்ளார்.

59 வயதுடைய டி.மனோமணி என்ற தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை வேண்டும்

### லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்துகிறார்

ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையாளர்களை அழைத்து விசாரணை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு விசாரணை மேற்கொள்ளாமல் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஏப்ரல் தாக்குதல் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய போதுமான சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் தெரிவித்திருக்கின்றார். முறையான சாட்சியம் இல்லாமல் வழக்குதொடுக்கமுடியாது. ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கும் தேவையான சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

ஏப்ரல் தாக்குதல் தொடர்பான பிரதான சாட்சியம்தான் சஹ்ரானுக்கு யார் சம்பளம் வழங்கியது என்பதாகும். 2010 இற்கும் 2015 இற்கும் இடைப்பட்ட காலத்திலேயே சம்பளம் வழங்கப்பட்டிருக்கின்றது. சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருக்கும் போது சஹ்ரானிடமிருந்து எந்த உதவியையும் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்திருக்கின்றார். சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கிய விடயம் தொடர்பான சாட்சியம் ஆணைக்குழுவுக்கு வழங்கினால் அரசாங்கத்தின் உண்மை வெளிப்படும் என்ற காரணத்தாலேயே அதனை வெளிப்படுத்தவில்லை.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதிகளுக்கும் எமது குற்றப்புலனாய்வு பிரிவுக்கும் தொடர்பு இருக்கின்றது. குற்றப்புலனாய்வு அதிகாரியான நிலந்த ஜயவர்த்தன அன்று அவருக்கு கிடைத்த தகவல்களை அப்போதைய ஜனாதிபதிக்குத் தெரிவிக்கவில்லை என்பது ஆணைக்குழு சாட்சியத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. தொடர்பு இருந்ததாலே தகவல்களை தெரிவிக்காமல் இருந்திருக்கிறார்.

அதனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச விசாரணை அதிகாரிகளுக்கு ஒப்படைக்கவேண்டும். அமெரிக்காவின் எப்.பி.ஐ., ஸ்கொட்லாந்து விசாரணை அதிகாரிகளை அழைத்து இந்த விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு இல்லாமல் ஏப்ரல் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை. - என்றார்.

## நாட்டை காட்டிக்கொடுப்பதே துறைமுக நகர சட்ட மூலம்

நாட்டின் சுயாதீனம் ஆட்புல ஒருமைப்பாட்டை பாதுகாத்துக்கொள்ளவே உயிர் தியாகம் செய்து யுத்தம் வெற்றிகொள்ளப்பட்டது. ஆனால் அரசாங்கம் அந்த உயிர் தியாகிகளை அகௌரவப்படுத் தும் வகையிலே நாட்டைக் காட்டிக்கொடுக்கும் துறைமுக நகர சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கின்றது என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டின் சுயாதீனம் ஆட்புல ஒருமைப்பாடுக்காகவே நாட்டு மக்களின் ஒத்துழைப்புடன் யுத்தம் வெற்றிகொள்ளப்பட்டது. அன்று நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களின் நோக்கமாக இருந்தது, நாட்டின் சுயாதீனம் மற்றும் ஆட்புல ஒரு மைப்பாடாகும். ஆனால் அரசாங்கம் நாட்டின் சுயாதீனம் ஆட்புல ஒருமைப்பாட்டை காட்டிக் கொடுக்கும் வகையில் துறைமுக நகர திட்டமிடல் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கின்றது.

மேலும் யுத்தம் வெற்றிகொள்ளப்பட்டு 12 வருடங்கள் நிறைவடையும் தினத் தில் நாட்டுக்காக உயிர்த்தியாகம்செய்த வீரர்களை கௌரவிப்பதற்குப் பதிலாக, நாட்டை காட்டிக் கொடுக்கும் சட்டமூலம் ஒன்றையே அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கின்றது. அரசாங்கத்தின் வரலாற்றுத் துரோகம் இன்று வெளிப்பட்டிருக்கின்றது.

அரசாங்கம் கொவிட் பிரச்சினைக்கு மத்தியில், அவசர அவசரமாக துறைமுக நகர திட்டமிடல் சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து, அதனை அனுமதித்துக்கொள்ளவே முயற்சித்தது. ஆனால் எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் குறித்த சட்டமூலம் அரச மைப்புக்கு விரோதமானது எனத் தெரிவித்து, நீதிமன்றம் சென்று வாதிட் டிருந்தன. அதனடிப்படையில், அரசாங் கம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கும் துறைமுக சட்ட மூலம் அரசமைப்புக்கு விரோதமானது என்பது உயர் நீதிமன்றம் தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

மேலும் அரசாங்கம் கொவிட் தொற்றை கட்டுப்படுத்த தேவையான தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கத் தவறியதாலேயே, மக்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தாமதமாகி இருக்கின்றது. இந்திய வெளிவிவகார அமைச்சர் நாட்டுக்கு வந்தபோது, தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையில் இலங்கைக்கு முன்னுரிமை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால்அதனை பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. என்றார்.

## கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய பக்தர்களுக்கான அறிவித்தல்..!!

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தில் வருடாந்தம் இடம்பெறுகின்ற வேள்வி பொங்கல் விழாவுக்கான விளக்கு வைத்தல் உற்சவம் எதிர்வரும் 21ம் திகதி வெள்ளிக்கிழமையும், வேள்வி பொங்கல் விழா எதிர்வரும் 29ம் திகதி சனிக்கிழமையும், எட்டாம் மடை பொங்கல் உற்சவம் எதிர்வரும் 04ம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ள நிலையில், நாட்டில் தற்போது இருக்கின்ற கொவிட் –19 அசாதாரண சூழ்நிலை காரணமாக பக்தர்கள் எவருக்கும் மேற்குறித்த உற்சவங்களில் பங்குபெற்றுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குறிப்பு:**- வேள்வி பொங்கல் விழா நடைபெறும் தினத்திலோ, எட்டாம் மடை பொங்கல் நடைபெறும் தினத்திலோ பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தருவதையோ, நேர்த்திக் கடமைகளுக்காக கிடாய்கள், சேவல்கள் போன்றவற்றை ஆலய வளாகத்துக்குள் கொண்டுவருவதையோ, பொங்கல் மடை பரவுதலில் ஈடுபடுவதையோ தயவுகூர்ந்து தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**- தர்மகர்த்தா -**






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2021 இல் வெளியிடப்பெற்றது.